**அல்லாஹ்வின் கட்டளை**

وَمَنۡ اَظۡلَمُ مِمَّنِ افۡتَرٰی
عَلَی اللّٰہِ کَذِبًا اَوۡ کَذَّبَ بِاٰیٰتِہٖ ؕ
اِنَّہٗ لَا یُفۡلِحُ الظّٰلِمُوۡنَ

அல்லாஹ்வைப் பற்றி பொய் புனையவோ அல்லது அவனுடைய அடையாளங்களைப் பொய்யாக்கவோ செய்பவனை விட அக்கிரமக்காரன் யார்? நிச்சயமாக அக்கிரமக்காரார்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை. (6:22)

بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 5

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

01 ரஜப் 1443 ஹிஜ்ரி கமரி 03 தப்லீக் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 03 பிப்ரவரி 2022


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## அஹ்மதிய்யத்தின் தலைமையகம் தாருல் அமான் காதியானில் 126 வது ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் MTA தொலைக்காட்சி மூலம் ஆற்றிய அருளுக்குரிய மாநாட்டு நிறைவுரை

*♦ கோவிட் தொற்றானது உள்ளங்களின் அழுக்குகளை நீக்கவில்லை. இந்த எச்சரிக்கையிலிருந்து மனிதன் எந்த படிப்பினையும் பெறவில்லை. இதே நிலை தொடர்ந்தால் பின்னர் மாபெரும் அபாயகரமான விளைவுகள் வெளிப்படும்*

*♦ இன்று இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளின் சில அம்சங்களை எடுத்துரைப்பேன். அதன்படி செயல்பட்டால் பின்னர் உலகம் அமைதிப்பூங்காவாக மாறி விடும்*

*♦ ஒருவர் மற்றவரின் மார்க்கத்தின் தோற்றுநரை தவறானவராக குறிப்பிட்டு அவர் மீது பழி சுமத்தக் கூடாது என்று இஸ்லாம் கூறுகின்றது. மற்ற அனைத்து மார்க்கங்களும் பொய்யானவையாக இருந்தன என்று இஸ்லாம் கூறவில்லை. எல்லா சமுதாயங்களிலும் தூதர் வந்ததாக இஸ்லாம் கூறுகின்றது. மேலும் وَاِنۡ مِّنۡ اُمَّۃٍ اِلَّا خَلَا فِیۡہَا نَذِیۡرٌ என்ற வசனத்தின் ஒளியில் ஒரு முஸ்லிம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களையும் அல்லது இந்துக்களின் அவதாரங்களையும் கண்ணியத்துடன் பார்க்க வேண்டும் என்றும் இஸ்லாம் கூ றுகின்றது*

*♦ ஒவ்வொரு மார்க்கத்தின் தோற்றுநருக்கும் கண்ணியம் வழங்க வேண்டும். மேலும் எல்லா மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர்களுக்கும் கண்ணியம் வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது*

*♦ இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என்றும், பலவந்தமாக மக்கள் முஸ்லிம்களாக ஆக்கப்பட்டு விட்டனர் என்றும் இஸ்லாத்தைக் குறித்து ஒரு தவறான சித்திரம் நிலைநாட்டப்பட்டுள்ளது. உண்மையில் இஸ்லாம் அதனை மறுக்கின்றது*

*♦ இஸ்லாம் இந்த உலகத்தில் தன்னை ஏற்காததன் காரணமாக எவருக்கும் தண்டனை வழங்கவில்லை. இன்றும் முஸ்லிம்களின் செயல் இந்த போதனைக்கு ஏற்புடையதாக அமைந்து விட்டால் பின்னர் உலகத்திற்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடும்*

*♦ தண்டனை வழங்குவதால் சீர்திருத்தம் ஏற்படுமா? அல்லது மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படுமா? என்று பார்க்க வேண்டும். சீர்திருத்தம் நோக்கமாக இருக்க வேண்டும்*

*♦ எல்லா வகையான கொடுக்கல் வாங்கலிலும் ஒருவர் மற்றவரின் உரிமைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது*

*♦ தற்பெருமை கொள்ளாதீர்கள். மக்களை ஏளனமாகவும், இழிவாகவும் கருதாதீர்கள். ஆணவம் கொண்டு எவரும் எந்த உயர் அந்தஸ்தையும் அடைய முடியாது என்றும் இஸ்லாம் கூறுகின்றது. பணிவு தான் உண்மையான தலைமைத்துவத்தை வழங்குகின்றது. இந்த தலைமைத்துவம் தான் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டக் கூடியதாக ஆக முடியும்*

*♦ ஜல்ஸாவின் அருட்களையும் அதில் பங்கு பெற்றவர்கள் தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டும். உலகில் எல்லா இடங்களிலும் இந்த நிகழ்ச்சியை கேட்கக் கூடியவர்கள் ஓர் உத்வேகத்தையும், உணர்வையும் தன்னுள் ஏற்படுத்திக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் தமது பகுதிகளில் இஸ்லாத்தின் தூய போதனைகளின் ஒளியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும் – ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்)*

கோவிட் சூழ்நிலையின் காரணமாக ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டல் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு இந்த ஜல்ஸா நடைபெற்றது. ஆயினும் நேரடி ஒளிபரப்பின் மூலமாக ஜல்ஸாவிலிருந்து பெரும் அளவில் பயன் பெறப்பட்டது. நேரடி ஒளிபரப்பின் மூலமாக 1,06,646 நபர்கள் ஜல்ஸாவை பார்க்கவும், கேட்கவும் செய்துள்ளனர். 6 தேசிய மொழிகளில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் மொழியாக்கம் செய்யப்பட்டன. மார்க்க அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றினர். ஜமாஅத் உறுப்பினர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக தர்பிய்யத் அம்சங்களைக் கொண்ட ஆவண படங்கள் ஒளிபரப்பப்பட்டன. பல நிக்காஹ் அறிவிப்புகள் செய்யப்பட்டன. அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் ஜல்ஸாவின் செய்திகள் வெளியாகியுள்ளன. மிக நிம்மதியான, மகிழ்ச்சிகரமான கால நிலையில் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளும் நடந்து முடிந்தன

### நிறைவு அமர்வு மற்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிறைவுரை

இன்று (26.12.2021) காதியான் ஜல்ஸாவின் இறுதி நாளாகவும், இறுதி அமர்வாகவும் இருந்தது. இந்த நிறைவு அமர்வில் ஸய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சொற்பொழிவாற்ற இருந்தார்கள். மாநாட்டுத் திடலில் பார்வையாளர்கள் மௌனமாக அமர்ந்திருந்து ஹுஸூர் அவர்களின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். ஹுஸூர் அன்வர் அவர்களின் சொற்பொழிவுக்கு முன்பாக லண்டன் MTA Studio விலிருந்து புனித நகரம் காதியான் தாருல் அமானைக் குறித்தும், ஜல்ஸா ஸாலானா காதியானைக் குறித்தும் ஓர் அழகிய ஆவண படம் ஒளிபரப்பப்பட்டது. ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லான் அவர்களின் அருளுக்குரிய தலைமையில் மஸ்ரூர் கட்டிடத்திலிருந்து MTA தொடர்புகளின் மூலமாக இந்த ஜல்ஸாவின் நிறைவு அமர்வு முழு உலகிலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய நேரப்படி 4:00 மணிக்கு இஸ்லாமாபாத்திலுள்ள மஸ்ரூர் கட்டிடத்திற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து பார்வையாளர்களக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹ் என்ற அன்பளிப்பை வழங்கினார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் கூட்டம் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய மஹ்மூத் அஹ்மது வருதி சாஹிப் அதற்குரிய நற்பேறை பெற்றார்கள். சூரா ஆலி இம்ரானின் 20 முதல் 23 வரையுள்ள வசனங்களை ஓதி அதன் உருது மொழியாக்கத்தையும் எடுத்துரைத்தார்கள். மதிப்பிற்குரிய உமர் ஷரீஃப் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதையை பாடினார்கள். அதன் பிறகு ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தஷஹ்ஹுத் தஅவ்வூத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு நிறைவுரை நிகழ்த்தினார்கள். (அறிக்கை: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர் – தொடரும்....)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **31 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

إِلَّا تَنْصُرُوْهُ فَقَدْ نَصَرَهُ اللّٰهُ إِذْ أَخْرَجَهُ الَّذِيْنَ كَفَرُوْا ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ إِذْ يَقُوْلُ لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا ۚ فَأَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهٗ عَلَيْهِ وَأَيَّدَهٗ بِجُنُوْدٍ لَّمْ تَرَوْهَا وَجَعَلَ كَلِمَةَ الَّذِيْنَ كَفَرُوا السُّفْلٰى ۗ وَكَلِمَةُ اللّٰهِ هِيَ الْعُلْيَا ۗ وَاللّٰهُ عَزِيْزٌ حَكِيْمٌ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தவ்ர் குகை சம்பவம் பற்றிய குறிப்பு நடைபெற்றிருந்தது. தவ்ர் குகையில் எதிரிகள் வந்தடைந்த சம்பவத்தின் அடிப்படையில் திருக்குர்ஆனின் இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். அதன் பொருள் இவ்வாறாகும்: நீங்கள் இத்தூதருக்கு உதவி செய்யாவிட்டாலும் அல்லாஹ் முன்னரே அவருக்கு உதவி செய்து விட்டான். நிராகரிப்பாளர்கள் அவரை அந்த இருவரில் ஒருவராக இருந்த நிலையில் நாட்டிலிருந்து வெளியேற்றிய நேரத்திலும், அவர்கள் இருவரும் குகையில் இருந்தபோதும் நீங்கள் கவலைபடைய வேண்டாம் என்று அவர் தமது தோழரிடம் கூறிக் கொண்டிருந்த நேரத்திலும் அல்லாஹ் அவருக்கு உதவி செய்தான். எனவே அல்லாஹ் அவர் மீது தனது அமைதியை இறக்கி நீங்கள் ஒருபோதும் கண்டிராத படையினர் மூலம் அவருக்கு உதவி செய்து நிராகரிப்பாளர்களின் கூற்றுகளை மிகவும் கீழ்த்தரமானதாக்கி விட்டான். அல்லாஹ்வின் வார்த்தையே எப்போதும் மிக உயர்ந்தது. மேலும் அல்லாஹ் மிகைத்தவனும், நுட்பமான ஞானம் கொண்டவனும் ஆவான். (9:40)

தவ்ர் குகை சம்பவம் தொடர்பாக திருக்குர்ஆனில் இந்த குறிப்பு கிடைக்கின்றது. குகையின் வாசலில் நின்று கொண்டு மக்கத்து காஃபிர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிடிக்கப்பட்டு விட்டார்கள் என்றால் பின்னர் என்னவாகும்? என்று எதிரிகளின் கூற்றை கேட்டு விட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) பதற்றமடைந்து விட்டார்கள். அனைத்தும் ஒரு வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இருப்பையே சார்ந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து அன்னார் (ரலி) அவர்கள் அடைந்த பதற்றத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பதற்றம் ஏற்படுகின்றது என்பதை கண்டபோது அன்னார் (ஸல்) அவர்கள், لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا – அபூபக்ரே! கவலையடைய வேண்டாம். நிச்சயமாக நமது இறைவன் நம்முடன் இருக்கின்றான் என்று கூறினார்கள்.

(ஷரஹ் ஸர்கானி அலல் மவாஹிப் தொகுதி 2 பக்கம் 123 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்தவாறு எதிரிகள் தவ்ர் குகையின் மலையை வந்தடைந்தார்கள். அப்போது பாதங்களின் தடத்தை வைத்து பாதையை தேடக் கூடியவர் இவ்வாறு கூறினார்: இதற்குப் பிறகு அவர்கள் இருவரும் எங்கே அடியெடுத்து வைத்தார்கள்? என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் குகைக்கு அருகில் வந்தபோது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! எவரைத் தேடி நீங்கள் வந்துள்ளீர்களோ அவர் இங்கிருந்து முன்னால் செல்லவில்லை என்று அவர் கூறினார்.

(தாரீகுல் ஹமீஸ் தொகுதி 2 பக்கம் 15 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

குகையின் வாசலில் அவர் இந்த அனைத்து விஷயத்தையும் கூறினார். குகையினுள் எட்டிப் பார்க்க வேண்டுமென்று ஒருவர் விரும்பினார். அப்போது இந்த சிலந்தி வலை (மற்றும் மரத்தை), முஹம்மது (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே நான் பார்த்து வருகின்றேன். உங்களது மூளை கெட்டு விட்டது. அவர் இங்கே எப்படி இருக்க முடியும்? இங்கிருந்து செல்லுங்கள். வேறொரு இடத்திற்கு சென்று தேடுவோம் என்று உமைய்யா பின் ஹல்ஃப் என்பவன் கூறினான். இவ்வாறு கூறியவாறு அனைத்து மக்களும் அங்கிருந்து திரும்பி சென்று விட்டனர்.

(அல்மவாஹிப் லித்துன்யா தொகுதி 1 பக்கம் 293, 293 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் மக்கத்து குரைஷிகளின் அறிவிப்பு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து சென்றது குறித்து கூறிய விஷயங்கள் இவ்வாறாகும்: எவர் முஹம்மது (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்து விடுவாரோ அவருக்கு 100 ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும் என்று எதிரிகள் அறிவித்தனர். எனவே ஏராளமான மக்கள் பரிசு பெற வேண்டும் என்ற ஆசையில் மக்காவின் நாலாபுறமும் இங்கும் அங்கும் புறப்பட்டு சென்றனர். குரைஷிய தலைவர்கள் சுயமே கால்களின் தடத்தை வைத்து அன்னார் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து வந்தார்கள். தவ்ர் குகையின் வாயில் வரை வந்தடைந்து விட்டார்கள். இதற்கு மேல் அந்த நபர் வேறு எங்கும் செல்லவில்லை. எனவே ஒன்று, முஹம்மது (ஸல்) இங்கே தான் அருகில் எங்கோ ஒளிந்திருக்கின்றார் அல்லது வானத்திற்கு பறந்து விட்டார். யாராவது ஒருவர் சற்று இந்த குகையின் உள்ளே சென்று பார்க்கலாம் என்று துப்பறிவாளன் கூறினான் . ஆனால் இது என்ன அறிவுப்பூர்வமான விஷயமா? எவராவது இந்த குகையில் ஒளிந்திருக்க முடியுமா? இது மிகவும் இருளான மற்றும் அபாயகரமான இடமாகும். எப்போதும் இதனை நாங்கள் இப்படியே பார்த்து வந்துள்ளோம் என்று ஒருவன் கூறினான்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. குகையின் வாசலில் ஒரு மரம் இருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே சென்ற பிறகு சிலந்தி வலை பின்னி விட்டது. சரியாக குகையின் வாசலுக்கு முன்னாலிருந்த மரத்தின் கிளையில் பெண் புறா ஒன்று கூடு கட்டி முட்டையும் இட்டு விட்டது.

மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் பார்வையில் இந்த அறிவிப்பு பலவீனமானதாகும். ஆயினும் அவ்வாறு நிகழ்ந்திருந்தால் அது ஒன்றும் ஒருபோதும் ஆச்சரியத்திற்குரிய விஷயமல்ல. பலவீனமான அறிவிப்பு தான். ஆனால் ஆச்சரியத்திற்குரிய விஷயம் ஒன்றுமல்ல. ஏனென்றால் சில நேரத்தில் சில நிமிடத்தில் சிலந்தி ஒரு பெரிய இடத்தில் வலை பின்னி விடுகின்றது. அதேபோன்று புறாவிற்கும் கூடு கட்டி முட்டையிடுவதற்கு அதிக நேரம் ஆகுவதில்லை. எனவே இறைவன் தனது தூதரின் பாதுகாப்பிற்காக இதுபோன்ற ஏற்பாட்டை செய்திருந்தால் அது ஒருபோதும் நடைமுறைக்கு அப்பாற்பட்டதல்ல. மாறாக, அப்போதைய காலத்தின் அடிப்படையில் அதுபோன்று நடப்பது முற்றிலும் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும். எவ்வாறிருப்பினும் குரைஷியர்களில் எந்த மனிதனும் முன்னால் செல்லவில்லை. மேலும் அங்கிருந்து அனைத்து மக்களும் திருப்பிச் சென்று விட்டனர்.

அன்னார் தொடர்ந்து எழுதுகின்றார்கள்: அறிவிப்பில் வருகின்றது. குரைஷியர்கள் எந்த அளவிற்கு நெருக்கமாக அருகில் வந்து விட்டார்கள் என்றால் அவர்களின் பாதங்களை குகைக்கு உள்ளே இருந்து பார்க்க முடிந்திருந்தது. மேலும் அவர்களின் சப்தமும் கேட்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்தவாறு மிக மெதுவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! குரைஷிகள் எந்த அளவிற்கு அருகில் வந்து விட்டார்கள் என்றால் அவர்களின் கால்கள் தென்படுகின்றன. அவர்கள் சற்று கீழே குனிந்து எட்டிப் பார்த்தால் நம்மை பார்த்து விட முடியும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். அதாவது ஒருபோதும் கவலையடைய வேண்டாம். அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். தொடர்ந்து وَمَا ظَنُّكَ يَا أَبَا بَكْرٍ بِاثْنَيْنِ اللّٰهُ ثَالِثُهُمَا என்று கூறினார்கள். அதாவது அபூபக்ரே! எந்த இரு நபர்களுடன் அல்லாஹ் இருக்கின்றானோ அவர்களைக் குறித்து உமது எண்ணம் என்ன?

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது: குரைஷிகள் குகையின் வாசலில் வந்தடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் பதற்றத்தைக் கண்டபோது எந்த பதற்றத்திற்கும் அவசியமில்லை என்று ஆறுதல் வழங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உருக்கம் நிறைந்த குரலில் اِنْ قُتِلْتُ فَاَنَا رَجُلٌ وَاحِدٌ وَاِنْ قُتِلْتَ اَنْتَ هَلَكَتِ الْاُمَّةُ என்று கூறினார்கள். அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருவேளை நான் கொல்லப்பட்டு விட்டால் நான் ஒரு தனித்த உயிர் ஆவேன். ஆனால் இறைவன் நாடாதிருக்கட்டுமாக. ஒருவேளை துரதிஷ்டவசமாக தங்களுக்கு ஏதாவது சிக்கல் வந்து விட்டால் பின்னர் முழு சமுதாயமும் அழிந்து விடும். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடமிருந்து கிடைத்த இல்ஹாமை இந்த சொற்களில் குறிப்பிட்டார்கள். لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا அதாவது அபூபக்ரே! ஒருபோதும் எந்த கவலையும் பட வேண்டாம். ஏனென்றால் இறைவன் நம்முடன் இருக்கின்றான். நாம் இருவரும் அவனது பாதுகாப்பில் இருக்கின்றோம். அதாவது நீங்கள் என் காரணமாக கவலையடைய வேண்டாம். உங்களுக்கு உங்களது உணர்வு மற்றும் கலப்பற்ற தன்மையால் எனது உயிரைக் குறித்து எந்த வேதனையும் வேண்டாம். ஏனென்றால் இறைவன் தற்போது எனது பாதுகாவலனாக மட்டும் இல்லை. மாறாக உங்களையும், நம் இருவரையும் எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக வைப்பான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 237–239)

இது சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலின் சான்றாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனை விரிவாக எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து ஹிஜ்ரத்திற்கான கட்டளை கிடைத்தது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு தவ்ர் மலையின் பக்கம் சென்று விட்டார்கள். அது மக்காவிலிருந்து 6, 7 மைல் தொலைவில் உள்ளது. அந்த மலையின் ஒரு பகுதியில் ஒரு குகையில் ஒளிந்து கொண்டு அமர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் இல்லை என்பதையும், எல்லா வகையான காவலுக்குப் பிறகும் முஹம்மது (ஸல்) அவர்கள் பாதுகாப்புடன் வெளியேறி விட்டார்கள் என்பதையும் காலையில் நிராகரிப்பாளர்கள் கண்டபோது உடனடியாக அன்னார் (ஸல்) அவர்களை தேடுவதற்காக புறப்பட்டு விட்டார்கள். மேலும் கைதேர்ந்த துப்பறிவாளர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். துப்பறிவாளர்கள் அவர்களை தவ்ர் மலை வரை அழைத்து வந்தார்கள். மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் உள்ளார் என்றால் இங்கே தான் இருக்கின்றார். இங்கிருந்து முன்னால் செல்லவில்லை. எந்த அடையாளமும் கிடைக்கவில்லை என்று கூறினார்கள்.

அந்த நேரத்தின் நிலை எப்படி இருந்ததென்றால் எதிரி குகையின் வாசலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தான். குகையின் வாசலும் குறுகியதாக இருக்கவில்லை. அதனுள் எட்டிப் பார்ப்பது கடினமும் இல்லை. அது ஒரு பெரிய பரந்துபட்ட திறந்த குகையாக இருந்தது. உள்ளே ஒருவர் அமர்ந்துள்ளாரா? அல்லது இல்லையா? என்பதை மிக எளிதாக எட்டிப் பார்த்து ஒருவரால் தெரிந்து கொள்ள முடியும். ஆயினும் அந்த நிலையிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அச்சமும் ஏற்படவில்லை. இன்னும் கூறப்போனால் அன்னார் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலின் பரக்கத்தின் விளைவாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளமும் உறுதியானது. நாங்கள் பிடிக்கப்பட்டு விட்டோம் என்று மூஸா (அலை) அவர்களின் சீடர்களைப் போன்று கூறவில்லை. மாறாக, அன்னார் ஏதாவது கூறினார்கள் என்றால் அது இந்த அளவில் தான் இருந்தது. அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எதிரி எந்த அளவிற்கு நெருக்கமாக வந்தடைந்து விட்டான் என்றால் அவன் சற்று குனிந்து கீழே பார்த்தால் நம்மை பார்த்து விட முடியும் என்று கூறினார்கள். நாம் இந்த நேரத்தில் இருவராக உள்ளோம்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் اُسْكُتْ يَا اَبَا بَكْرٍ اِثْنَانِ اللّٰهُ ثَالِثُهُمَا என்று கூறினார்கள். அதாவது அபூபக்ரே! அமைதியாக இருங்கள். நாம் தற்போது இருவர் அல்ல. மாறாக, நம்முடன் மூன்றாவதாக இறைவனும் உள்ளான். அவ்வாறிருக்க அவர்கள் எப்படி நம்மை பார்க்க முடியும்? எனவே அவ்வாறே நிகழ்ந்தது. எதிரி குகையின் வாசல் வரை வந்தடைந்து விட்டான். அவ்வாறிருந்தபோதிலும் அவன் முன்னால் சென்று குனிந்து பார்ப்பதற்கு அவனுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. மேலும் அவர்கள் அங்கிருந்து தற்பெருமை அடித்துக் கொண்டு திரும்பிச் சென்று விட்டார்கள்.

சுருக்கமாக, இந்த சம்பவத்தின் ஓர் அம்சம் இதுவாகும்: அதாவது மூஸா (அலை) அவர்களின் சீடர்கள் பதற்றமடைந்து மூஸாவே! நாம் பிடிக்கப்பட்டு விட்டோம் என்று கூறினார்கள். அவர்கள் தம்முடன் மூஸா (அலை) அவர்களையும் இணைத்துக் கொண்டார்கள். தற்போது நாம் அனைவரும் ஃபிர்அவ்னால் பிடிக்கப்பட இருக்கின்றோம் என்று எண்ணம் கொண்டார்கள். ஆனால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிச்சய உறுதியானது அன்னாரின் சீடர்கள் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எந்த அளவுக்கென்றால் நாங்கள் பிடிக்கப்பட்டு விட்டோம் என்ற சொல் அவரின் வாயிலிருந்து வெளிவரவில்லை. மாறாக, எதிரி மிகவும் அருகில் வந்து விட்டான். அவன் நம்மை பார்க்க விரும்பினால் பார்த்து விட முடியும் என்று மட்டுமே அவர் கூறினார். ஆனால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதனையும் பொருட்படுத்தவில்லை. அதுபோன்று எண்ணாதீர்கள். நாம் தற்போது இருவர் அல்ல. மாறாக, நம்முடன் மற்றோர் இருப்பும் உள்ளது. அவன் நமது இறைவன் ஆவான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 146, 147)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றோர் இடத்தில் கூறுகின்றார்கள்: மக்கத்து மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மீது எல்லையற்ற கொடுமைகள் செய்வதை தொடங்கி இருந்தனர். அவர்களின் காரணமாக மார்க்கத்தை பரப்புகின்ற பணிகளில் தடை உருவானது. அப்போது நீங்கள் மக்காவை விட்டு விட்டு சென்று விடுங்கள் என்று அல்லாஹ் அன்னாருக்கு கட்டளை வழங்கினான். அன்னார் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மக்காவை விட்டு சென்று விடுவதற்கு தயாராகியிருந்தார்கள். அதற்கு முன்பு பலமுறை வெளியேறுவதற்கு கூறியிருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விட்டு செல்வதற்கு அவர்கள் தயாராகவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல்லத் தொடங்கியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னாருடன் சேர்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் இரவு நேரத்தில் புறப்பட்டார்கள். மற்றோர் இடத்தில் ஹஜ்ஜின்போது நான் இதனைப் பார்த்துள்ளேன். மலையில் சாதாரண ஒரு குகை உள்ளது. 2, 3 அடி அகலமாக அதன் வாசல் உள்ளது. அதில் சென்று தங்கி விட்டார்கள். மக்கத்து வாசிகளுக்கு அன்னார் சென்று விட்டார்கள் என்று தெரிந்தபோது எதிரிகள் அன்னார் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து வந்தார்கள். அரபு நாட்டில் கால் தடங்களை வைத்து தேடக் கூடிய பெரும் பெரும் நிபுணர்கள் இருந்தார்கள். அவர்களின் உதவியுடன் அன்னார் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்தவாறு சரியாக அந்த இடத்தை அடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்கு அமர்ந்திருந்தார்களோ அங்கு வந்தடைந்து விட்டார்கள்.

இறைவனின் வல்லமையானது குகையின் வாசலில் சில சிலந்தி வலைகளை ஏற்படுத்தி இருந்தது. அதன் கிளைகள் ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தன. அந்த மக்கள் கிளைகளை அகற்றி விட்டு உள்ளே பார்த்திருந்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அமர்ந்திருப்பதை பாத்திருக்க முடியும். பாதங்களின் அடிச்சுவட்டை வைத்து தேடக் கூடியவர் அங்கு வந்தடைந்தபோது ஒன்று, அவர்கள் விண்ணிற்கு ஏறிச் சென்றிருக்க வேண்டும் அல்லது இங்கே ஒளிந்திருக்க வேண்டும் என்று கூறினான். அந்த நேரம் எப்படிப்பட்ட ஆபத்தான சந்தர்ப்பமாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்தார்கள். ஆயினும் தன்னைக் குறித்து பதற்றமடையவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எண்ணி பதற்றமடைந்தார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். ஏன் பதற்றடைகின்றீர்கள்? இறைவன் நம்முடன் இருக்கின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் தம்முடன் இருக்கின்றான் என்பதை பார்க்கவில்லையென்றால் அதுபோன்ற அபாயகரமான நேரத்தில் பதற்றமடையாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாக இருந்தது. மிகவும் பலம் படைத்த, வலிமை மிக்க இதயம் கொண்ட மனிதனும் சரியாக வாசலுக்கு அருகே எதிரி வந்து விட்டால் அச்சமடைந்து விடுகின்றான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அருகில் இன்னும் கூறப்போனால் எதிரி அன்னார் (ஸல்) அவர்களின் தலைக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். அந்த எதிரி எப்படிப்பட்டவனாக இருந்தான் என்றால் 13 ஆண்டுகளாக அன்னார் (ஸல்) அவர்களின் உயிரைப் பறிப்பதற்கு விரும்பி கொண்டிருந்தான். ஒன்று, அவர் வானத்திற்கு சென்றிருக்க வேண்டும் அல்லது இங்கே அமர்ந்திருக்க வேண்டும். இந்த இடத்தை விட்டு அவர்கள் முன்னால் செல்லவில்லை என்று துப்பறிவாளர்கள் கூறினர்.

அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். இறைவன் நம்முடன் இருக்கின்றான். பதற்றமடைவதற்கு என்ன அவசியம் வந்து விட்டது? எனவே இந்த இறைஞானத்தின் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனை தன்னுள் கண்டு கொண்டிருந்தார்கள். மேலும் நான் அழிந்து போனால் இறைஞானம் அழிந்து விடும். எனவே எவரும் தம்மை அழிக்க முடியாது என்று புரிந்திருந்தார்கள்.

(இர்ஃபானே இலாஹி அவ்ர் முஹப்பத் பில்லாஹ் கா ஆலி மர்தபா, அன்வாருல் உலூம் தொகுதி 11 பக்கம் 223, 224)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தமது தோழமையில் (ஹிஜ்ரத்தின்போது) ஒரே ஒரு நபரை மட்டுமே வைத்திருந்தார்கள். அதாவது தோமா என்ற நபரை (உடன் வைத்திருந்தார்கள்). ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை மட்டும் உடன் வைத்திருந்ததைப் போன்று தோமா ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் உடன் இருந்தார். ஏனென்றால் ரோமானிய பேரரசாங்கம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கிளர்ச்சியாளராக அறிவித்திருந்தது. இதே குற்றத்திற்காகவே பிலாத்து சீசரின் கட்டளையால் கொலை செய்யப்பட்டார். ஏனென்றால் அவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு மறைவாக உதவி செய்திருந்தார். அந்த நபரின் மனைவியும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடராக இருந்தார். எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அந்த நாட்டிலிருந்து ஒளிந்த மறைந்து வெளியேறுவது அவசியமாக இருந்தது. எனவே அந்த பயணத்தில் தோமா சீடரை மட்டும் தன்னுடன் வைத்துக் கொண்டார்கள். அதாவது நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் பயணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை மட்டும் உடன் வைத்திருந்ததைப் போன்று. நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏனைய சஹாபிகள் பல்வேறு வழிகளில் மதீனாவிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தடைந்தார்கள். அதேபோன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் பல்வேறு நேரங்களில் பல்வேறு வழிகளில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வந்தடைந்தார்கள்.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 ரூஹானீ கஸாயின் தொகுதீ 21 பக்கம் 402)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றுகையிடப்பட்டிருந்த அந்த துன்பமான நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உண்மை வெளிப்பட்டது. சில நிராகரிப்பாளர்கள் அன்னாரை வெளியேற்றி விட வேண்டும் என்றே கருதினர். ஆனால் அசல் நோக்கம் மற்றும் பெரும்பான்மையான கருத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்து விட வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதுபோன்ற நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது உண்மை மற்றும் நன்றியுணர்வின் எப்படிப்பட்ட முன்னுதாரணத்தை காட்டினார்கள் என்றால் அது உலகம் இருக்கும் வரை முன்மாதிரியாக இருக்கும்.

அந்த துன்பத்தின் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த தேர்ந்தெடுப்பே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உண்மைக்கும், உயர் நன்றியுணர்விற்கும் ஒரு வலிமையான சான்றாக உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தேர்ந்தெடுப்பின் நிலை இவ்வாறே இருந்தது. அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 70, 80 சஹாபிகள் இருந்தனர். அவர்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நெருக்கமான தோழராக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையே தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

இதில் என்ன இரகசியம் உள்ளது? விஷயம் என்னவென்றால், நபி என்பவர் இறைவனுடைய கண்ணைக் கொண்டு பார்க்கின்றார். இறைவன் புறமிருந்து அவருக்கு புரிதல் வழங்கப்படுகின்றது. எனவே அல்லாஹ்வே அன்னாருக்கு ஆன்மீக காட்சி மற்றும் இல்ஹாம் மூலமாக இவ்வாறு கூறினான்: இந்தப் பணிக்கு மிகவும் பொருத்தமான மற்றும் சிறந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே ஆவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த கடின நேரத்தில் அன்னார் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அந்த நேரம் அபாயகரமான சோதனையின் நேரமாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் அவர்கள் மீது இதுபோன்ற துன்பம் வந்தபோது அவரின் சீடர்கள் அவரை விட்டு விட்டு ஓடி விட்டனர். ஒருவரோ சபித்து விட்டார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளில் ஒவ்வொருவரும் முழுமையான நன்றியுணர்வின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தினார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். மேலும் தவ்ர் என்று கூறப்படும் ஒரு குகையில் அன்னார் (ஸல்) அவர்கள் மறைந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுப்பதற்காக திட்டங்கள் தீட்டியிருந்த தீய காஃபிர்கள் அன்னார் (ஸல்) அவர்களை தேடியவாறு அந்த குகையை வந்தடைந்தார்கள். தற்போது இவர்கள் நமது தலைக்கு அருகே வந்தடைந்து விட்டார்கள். ஒருவேளை எவராவது சற்று கீழே குனிந்து பார்த்தால் நம்மை அவர்கள் பார்த்து விடுவார்கள். நாம் பிடிக்கப்பட்டு விடுவோமோ? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். எந்த கவலையும் வேண்டாம். அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். இந்த சொல்லை சீர்தூக்கிப் பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தம்முடன் இணைத்துக் கொண்டார்கள். எனவே إِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். مَعَنَا என்பதில் அவர்கள் இருவரும் அடங்குவர். அதாவது அல்லாஹ் உம்முடனும், என்னுடனும் இருக்கின்றான். அல்லாஹ் ஒரு தட்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், மற்றொன்றில் ஹஸ்ரத் சித்தீக் (ரலி) அவர்களையும் வைத்துள்ளான். அந்த நேரத்தில் இருவரும் அபாயத்தில் இருந்தார்கள். ஏனென்றால் அந்த இடமே முக்கியமான தருணமாக இருந்தது. அங்கிருந்து ஒன்று இஸ்லாத்திற்கு அடித்தளம் அமைக்கப்பட இருந்தது அல்லது முடிவு கட்டப்பட இருந்தது. எதிரி குகைக்கு முன்னால் இருந்தான். பல்வேறு வகையான கருத்துக்கள் கூறப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த குகையில் சென்று தேடுங்கள் என்று சிலர் கூறினர். ஏனென்றால் பாதத்தின் அடையாளம் இங்கே தான் முடிவடைந்து விடுகின்றது. ஆனால் இங்கிருந்து மனிதன் எப்படி கடந்து செல்ல முடியும். சிலந்தி வலை பின்னியுள்ளது. புறா முட்டையிட்டுள்ளது என்று சிலர் கூறினர். இதுபோன்ற பேச்சுகளின் சப்தம் குகைக்குள் கேட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் மிக தெளிவாக அதை கேட்டுக் கொண்டிருந்தனர். முடிவு கட்டி விட வேண்டும் என்ற நிலையில் எதிரி அங்கு வந்தடைந்திருந்தான். மேலும் பித்துப் பிடித்தவனைப் போன்று எதிரி முன்னேறிக் கொண்டிருந்தான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் சிறப்பான வீரத்தை பாருங்கள். எதிரி தலை மேல் நின்று கொண்டிருக்கின்றான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உண்மையான தோழர் ஹஸ்ரத் சித்தீக் (ரலி) அவர்களிடம் لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறுகின்றார்கள். இந்த சொல் மிகவும் தெளிவாக இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாவினாலே அதை கூறியிருந்தார்கள். ஏனென்றால் சைகையால் இந்தப் பணி நடந்திருக்க முடியாது. வெளியில் எதிரி ஆலோசனை செய்து கொண்டிருந்தான். ஆனால் குகைக்குள் தலைவரும், தொண்டரும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் எதிரி நமது குரலை கேட்டு விடுவான் என்பதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இது அல்லாஹ்வின் மீது இருந்த சிறப்பான ஈமான் மற்றும் இறைஞானத்திற்கான சான்றாகும். மேலும் இறைவனின் வாக்குறுதிகள் மீது முழுமையான நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீரத்திற்கு இது போதுமான முன்னுதாரணமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 376 – 378)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றோர் இடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: கம்பீரமும், கண்ணியமும் மிக்க இறைவன் தனது தூய நபியை பாதுகாப்பாக வைப்பதற்கு அசாதாரண நடைமுறை மூலமாக இந்த விஷயத்தை காட்டினான். அதாவது எதிரிகள் அந்த குகை வரை வந்தடைந்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழருடன் ஒளிந்திருந்தார்கள். ஆனால் எதிரிகளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்க்க முடியவில்லை. ஏனென்றால் இறைவன் ஒரு ஜோடி புறாவை அனுப்பினான். அது அதே இரவில் குகையின் வாசலில் கூடு கட்டியிருந்தது. முட்டையும் இட்டிருந்தது. மேலும் இதேபோன்று இறை கட்டளையால் சிலந்தி அந்த குகையில் தனது வலையை பின்னியிருந்தது. அதனால் எதிரி ஏமாற்றத்திற்குள்ளாகி திரும்பிச் சென்று விட்டான்.

(சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 66 அடிக்குளிப்பு)

அடுத்து ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கேற்ப ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் புத்திசாலி மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் (ரலி) இரவில் தவ்ர் குகைக்கு வந்தார்கள். மேலும் பகல் முழுவதும் மக்காவில் நிகழ்ந்த செய்திகளை கூறினார்கள். மேலும் வழிகாட்டலைப் பெற்று அதிகாலையில் மக்காவிலேயே தங்கியிருந்ததைப் போன்று மக்காவிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். மேலும் அத்துடன் ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களின் புத்திக் கூர்மையும் இவ்வாறு அமைந்திருந்தது. அதாவது இரவில் பால் கொடுக்கும் ஆட்டு

மந்தைகளை பால் கொடுத்த பிறகு திரும்ப கொண்டு வந்தார்கள். அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபூபக்ர் (ரலி) அவர்களின் பாதத் தடங்களையும் கூட அத்துடன் அழித்து விட்டு சென்று விட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 1,2 பக்கம் 54 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் தினமும் உணவு எடுத்து வந்ததாக சில வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 54 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் இந்த விஷயம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும். அந்த அபாயகரமான நேரத்தில் ஒரு பெண்மணி தினமும் இங்கு வந்து செல்வது என்பது இரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு சமமாகும். அப்போது அப்துல்லாஹ் பின் அபீபக்ர் அவர்களும் தினமும் வந்து கொண்டிருந்தார்கள். அவ்வாறிருக்க ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு உணவு கொண்டு வருவதற்கு என்ன அவசியம் வந்து விட்டது? எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான். ஆயினும் மூன்று நாட்கள் இவ்வாறே கழிந்து விட்டன. மக்காவாசிகள் அக்கம் பக்கத்தில் தேடியவாறு தோல்வியுற்றனர். எனவே அப்போது அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து ஒரு மாபெரும் பரிசுக்கான அறிவிப்பை செய்தனர். அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களிலிருந்து நபர்களை அனுப்பி வைப்பதற்கு அறிவிப்பு செய்தனர். முஹம்மது (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ (நவூதுபில்லாஹ்) கொண்டு வந்தால் 100 ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்தனர். இவ்வளவு பெரிய பரிசுக்கான அறிவிப்பு என்பது ஏராளமான மக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடுகின்ற பணியில் மீண்டும் ஒரு முறை புத்துணர்வூட்டியது.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 58 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றொரு பக்கம் மூன்று நாள் முழுமையடைந்தபோது வாக்குறுதிக்கேற்ப அப்துல்லாஹ் பின் உரைகித் ஒட்டகங்களை அழைத்துக் கொண்டு வந்து விட்டார். சஹீஹ் புகாரியின் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 344 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பிலிருந்து நமக்கு இந்த தாக்கம் கிடைக்கின்றது. அதாவது தவ்ர் குகையிலிருந்து மதீனாவை நோக்கி காலை நேரத்தில் புறப்பட்டிருந்தார்கள். ஆனால் புகாரியின் ஓர் அறிவிப்பிலேயே இவ்வாறு விளக்கம் கிடைக்கின்றது. பயணம் இரவு நேரத்தில் தொடங்கி இருந்தது. அந்த வகையில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் உரைகிதைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தங்களது ஒட்டகங்களை ஏற்கனவே அவரிடம் ஒப்படைத்திருந்தார்கள். மேலும் மூன்று இரவிற்குப் பிறகு மூன்றாம் நாள் காலையில் ஒட்டகங்களை அழைத்துக் கொண்டு தவ்ர் குகைக்கு வந்தடைந்து விட வேண்டும் என்று அவருக்கு முன்பே புரிய வைத்திருந்தார்கள். எனவே அவர் ஒப்புக் கொண்டபடி அங்கு வந்தடைந்து விட்டார். இது புகாரியின் பிரபலமான அறிவிப்பாகும். ஆயினும் வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எழுதுகின்றனர்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவில் புறப்பட்டார்கள். புகாரியின் மற்றோர் அறிவிப்பு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவிலேயே புறப்பட்டிருப்பது சாத்தியமான விஷயமாகும் என்பதை உண்மைப்படுத்தவும் செய்கின்றது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 239, 240)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திங்கட்கிழமை இரவு ரபியுல் அவ்வல் 1 ஆம் தேதி குகையிலிருந்து புறப்பட்டு சென்று விட்டார்கள். இப்னு சஅத் அவர்களைப் பொருத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரபீவுல் அவ்வல் மாதத்தின் 4 ஆம் தேதியன்று திங்கள்கிழமை இரவில் குகையிலிருந்து புறப்பட்டார்கள்.

(தாரீகுல் ஹமீஸ் தொகுதி 2 பக்கம் 18 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியின் விரிவுரையாளர் அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கிலானி கூறினார்கள்: இமாம் ஹாகிம் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து திங்கட்கிழமை புறப்பட்டார்கள். மேலும் மதீனாவில் நுழைந்ததும் திங்கட்கிழமையாக இருந்தது என்று தொடர்ந்து பலரும் கூறியுள்ளனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வியாழக்கிழமையன்று புறப்பட்டார்கள் என்று முஹம்மது பின் மூஸா அவர்கள் மட்டும் கூறியுள்ளார்கள்.

அல்லாமா இப்னு ஹஜர் இந்த அறிவிப்புகளை ஒப்புமைபடுத்தியவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வியாழக்கிழமையன்று புறப்பட்டார்கள். வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து குகையில் இரவுகளில் தங்கிய பிறகு திங்கட்கிழமை இரவு மதீனாவிற்கு புறப்பட்டார்கள்.

(ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹ் புகாரி தொகுதி 7 பக்கம் 229)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஸ்வா என்ற பெயரைக் கொண்ட ஒட்டகத்தில் சவாரி செய்து சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது ஒட்டகத்தில் ஆமிர் பின் ஃபுஹைராவுடன் சவாரி செய்தார்கள். உரைகித் தமது ஒட்டகத்தில் சவாரி செய்து சென்றார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வீட்டிலிருந்த மொத்த தொகையான ஐந்து அல்லது ஆறாயிரம் திர்ஹமை தம்முடன் எடுத்துச் சென்றார்கள். சில அறிவிப்புகளுக்கேற்ப ஆமிர் பின் ஃபுஹைரா மற்றும் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) ஆகியோர் உணவு எடுத்து வந்தனர். அதில் பொறிக்கப்பட்ட ஆட்டின் இறைச்சியும் இருந்தது. ஆனால் தண்ணீர் மற்றும் உணவை கட்டுவதற்கு எந்தவொரு துணியும் இல்லை என்பது வந்த பிறகு தெரிந்தது. அப்போது ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் தமது இடுப்புத் துணியை அவிழ்த்து இரண்டு துண்டாக்கினார்கள். ஒன்றைக் கொண்டு உணவையும், மற்றொன்றைக் கொண்டு தண்ணீர் பையின் வாயையும் கட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு சொர்க்கத்தில் இரண்டு இடுப்புத் துணி வழங்கப்படும் என்ற நற்செய்தியை வழங்கியுள்ளார்கள். மேலும் அவர்கள் அனைவரையும் வழி அனுப்பி வைத்தார்கள். மேலும் اَللّٰهُمَّ اصْحَبْنِيْ فِيْ سَفَرِيْ، وَاخْلُفْنِيْ فِيْ أَهْلِيْ என்ற துஆவை செய்தவாறு பயணத்தை தொடங்கினார்கள். அல்லாஹ்வே! எனது பயணத்தில் நீ என்னுடன் இருப்பாயாக. எனது குடும்பத்தினருக்கு எனது பிரதிநிதியாக ஆகி விடுவாயாக.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 345 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இடுப்புத் துணி மூலமாக உணவைக் கட்டுகின்ற சம்பவம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து புறப்படும்போது நிகழ்ந்தது என்ற குறிப்பு ஏற்கனவே செய்யப்பட்டு விட்டது. ஆனால் இங்கும் இந்த குறிப்பு கிடைக்கின்றது. வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பத்தில் இந்த குறிப்பு கிடைக்கின்றது. சிலரின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்காக மக்காவிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து தவ்ர் குகைக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தபோது நிகழ்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தவ்ர் குகையிலிருந்து மதீனா புறப்பட்டுக் கொண்டிருந்தபோது நிகழ்ந்தது என்று சிலர் கருதுகின்றனர். எவ்வாறிருப்பினும் இந்த இரண்டு குறிப்புகளும் கிடைக்கின்றன. ஆனால் புகாரியில் ஹிஜ்ரத் பயணத்தின் விளக்கமாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியுள்ள அந்த அறிவிப்பின் தொடர்ச்சியில் நமக்கு இந்த தாக்கமே கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து புறப்பட்டபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது.

எனவே புகாரியின் அறிவிப்பிற்கு முன்னுரிமை வழங்குவது மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் முதலில் தவ்ர் குகையில் தங்கியபோது அந்த செய்தி இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அங்கு ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் உணவு எடுத்துச் செல்வது சாத்தியமற்றதாக தென்படுகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் மற்றும் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுகைரா ஆகிய இருவரும் தினமும் ஒளிந்து மறைந்து அங்கு சென்று வந்தனர். அவ்வாறிருக்கும்பொழுது ஒரு பெண்மணி செல்வது பாதுகாப்பு மற்றும் எச்சரிக்கைகளின் எதிர்பார்ப்புக்கு எதிராக உள்ளது. எவ்வாறிருப்பினும் வீட்டிலேயே இடுப்புத் துணி மூலமாக உணவு பொட்டலத்தை கட்டுகின்ற சம்பவம் வருகின்றது. அதில் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களின் அர்ப்பணிப்புமிக்க உணர்வும், உளப்பூர்வமான நேசத்தின் காட்சிகளும் தென்படுகின்றன. அதாவது உணவுப் பொட்டலத்தை கட்டுவதற்காக வேறொரு பொருளை தேடுவதில் நேரத்தை வீணடிப்பதற்கு பகரமாக தமது இடுப்புத் துணியிலிருந்து துணியை கிழித்து உணவைக் கட்டியது மிகவும் உணர்வுப்பூர்வமான சம்பவமாகும்.

குகையிலும் இந்த சம்பவம் நடந்திருக்கும் என்று சிலர் கூறலாம். ஏனென்றால் அங்கு எந்தப் பொருளும் இருந்திருக்காது. எனினும் வீட்டிலேயே இந்த சம்பவம் நிகழ்ந்திருக்க முடியும். உடனடியாக எந்தப் பொருளும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

கிடைக்கவில்லை. நேரம் வீணாகி விடுவதற்கான அச்சம் இருந்தது. எனவே தமது இடுப்புத் துணியிலிருந்து துணியை கிழித்து உணவுப் பொட்டலத்தை கட்டி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வழி அனுப்பி வைத்து விட்டார்கள்.

எனவே உணவுப் பொட்டலத்தை கட்டுகின்ற சம்பவம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து புறப்படும்போது நிகழ்ந்திருக்குமேயொழிய தவ்ர் குகையிலிருந்து மதீனாவை நோக்கி பயணத்தை தொடங்கியிருக்கும்போது நடந்திருக்காது என்பது புகாரியின் அறிவிப்பின்படி மிகவும் சரியானதாக தோன்றுகின்றது. எவ்வாறிருப்பினும் அல்லாஹு அஃலம்.

ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்காக புறப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது அனைத்து செல்வங்களையும் தன்னுடன் எடுத்துச் சென்றார்கள். அவை ஐந்து அல்லது ஆறாயிரம் திர்ஹமாக இருந்தது.

அன்னார் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எமது தந்தைவழிப் பாட்டனார் அபூ குஹாஃபா எங்களிடம் வந்தார். அந்நேரத்தில் அன்னாரது பார்வை பறிபோய் இருந்தது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனது எண்ணம் என்னவென்றால், அவர் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) தமது இருப்புடன் மட்டுமின்றி தமது செல்வத்தின் மூலமாகவும் உங்களை துன்பத்தில் ஆழ்த்தியுள்ளார் என்று அவர் கூறினார். அப்போது தந்தைவழிப் பாட்டனாரே! இல்லை! அவ்வாறு ஒருபோதும் இல்லை என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறினார்கள். அன்னார் எங்களுக்காக ஏராளமான செல்வத்தை விட்டு விட்டுச் சென்றுள்ளார்கள் என்று கூறினார்கள்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சில கற்களை எடுத்தேன். அதனை வீட்டின் ஜன்னலில் வைத்து விட்டேன். அங்கு எனது தந்தையார் செல்வத்தை வைத்து வந்தார்கள். பின்னர் நான் அதன் மீது துணியை போட்டு விட்டேன். மேலும் தந்தைவழிப் பாட்டனார் அவர்களே! இந்த செல்வத்தின் மீது உங்களது கைகளை வையுங்களேன் என்று அன்னாரின் கையைப் பிடித்து நான் கூறினேன். எனவே அன்னார் அதன் மீது தனது கரத்தை வைத்தார்கள். எந்தப் பிரச்சனையும் இல்லை. அவர் உங்களுக்காக இவ்வளவு செல்வத்தை விட்டு விட்டுச் சென்றுள்ளார் என்றால் பின்னர் அவர் நல்ல பணி செய்துள்ளார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களுக்காக எதனையும் விட்டு விட்டுச் செல்லவில்லை. ஆனால் அந்தப் பெரியவருக்கு இவ்வாறு நான் மன நிறைவை வழங்க விரும்பி இருந்தேன்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 345 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் தவ்ர் குகையிலிருந்து புறப்பட்ட சம்பவத்தை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்: தவ்ர் குகையிலிருந்து புறப்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தின் மீது அமர்ந்தார்கள். அதன் பெயர் சில அறிவிப்புகளில் அல்கஸ்வா என்று கூறப்பட்டுள்ளது. மற்றொர் ஒட்டகத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னாரின் தொண்டர் ஆமிர் பின் ஃபுகைரா அவர்களும் சவாரி செய்து கொண்டார்கள். புறப்படும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி இறுதியாக பார்த்தார்கள். மக்காவின் நகரமே! எல்லா ஊர்களையும் விட நீ எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாவாய். ஆனால் உனது மக்கள் என்னை இங்கு வசிக்க விடவில்லை என்று ஏக்கமிகு சொற்களில் கூறினார்கள். அப்போது இந்த மக்கள் தமது நபியை வெளியேற்றி விட்டார்கள். இனி இவர்கள் நிச்சயம் அழிந்து விடுவார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 240)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டு நாட்கள் இதே குகையில் காத்திருந்த பிறகு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஆலோசனைக்கேற்ப இரவு நேரத்தில் குகைக்கு அருகில் சவாரிகள் கொண்டு வரப்பட்டன. இரண்டு வேகமாக ஓடக் கூடிய ஒட்டகங்களில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களும், அன்னாரின் தோழர்களும் புறப்பட்டார்கள். ஓர் ஒட்டகத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களும், வழிகாட்டியும் சவாரி செய்தனர். இருவரும் ஒரே ஒட்டகத்தில் சவாரி செய்திருந்தார்கள் என்றும் ஓர் அறிவிப்பில் வருகின்றது. மற்றோர் அறிவிப்பில் மூன்று ஒட்டகங்கள் இருந்தன என்றும் வருகின்றது.

எவ்வாறிருப்பினும் இரண்டாவது ஒட்டகத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், அன்னாரின் தொண்டர் ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களும் சவாரி செய்திருந்தார்கள். மதீனாவை நோக்கி புறப்படுவதற்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது முகத்தை மக்காவை நோக்கி திருப்பினார்கள். எந்த தூய நகரத்தில் அன்னார் பிறந்தார்களோ மேலும் எங்கு அன்னார் தோன்றினார்களோ மேலும் எந்த நகரத்தில் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் காலத்திலிருந்து அன்னார் (ஸல்) அவர்களின் மூதாதையர்கள் வசித்து வந்தார்களோ அந்த நகரத்தை நோக்கி இறுதி பார்வையை செலுத்தினார்கள். மேலும் ஏக்கம் நிறைந்த சொற்களில் நகரத்தை நோக்கி பார்த்தவாறு இவ்வாறு கூறினார்கள்: மக்காவின் நகரமே! எனக்கு நீ எல்லா இடங்களையும் விட மிகவும் அன்பிற்குரிய இடம் ஆவாய். ஆனால் உமது மக்கள் என்னை இங்கு வசிக்க விடவில்லை. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மிகவும் வேதனையுடன் இவ்வாறு கூறினார்கள்: இந்த மக்கள் தமது நபியை வெளியேற்றி விட்டார்கள். இனி இவர்கள் நிச்சயம் அழிந்து விடுவார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 344– 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஜுஹ்ஃபா என்ற இடத்தை அடைந்தனர். ஜுஹ்ஃபா என்ற இடம் மக்காவிலிருந்து சுமார் 82 மைல் தொலைவில் உள்ளது. அப்போது இந்த வசனம் இறங்கியது. إِنَّ الَّذِىْ فَرَضَ عَلَيْكَ الْقُرْاٰنَ لَرَآدُّكَ اِلٰى مَعَادٍ இ ந் த திருக்குர்ஆனை உமக்குக் கடமையாக்கியவன் (உம்முடைய) திரும்புமிடத்திற்கு நிச்சயமாக உம்மை மீண்டும் திரும்ப கொண்டு வருவான்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 172 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு பயணம் இரவு முழுவதும் தொடர்ந்தது. எந்த அளவுக்கென்றால் மதிய வேளை வந்தபோது ஒரு பாறையின் நிழலில் ஓய்விற்காக பயணக்குழு நின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படுக்கையை ஆயத்தப்படுத்தினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஓய்வெடுக்கும்படி விண்ணப்பித்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படுத்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் யாராவது பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றாரா? என்று வெளியே வந்து பார்த்தார்கள். இதற்கிடையில் தொலைவில் ஆடுகளின் ஒரு மந்தையை மேய்க்கக் கூடிய ஒருவர் நிழலை தேடிக் கொண்டு வெளியேறி இருந்தார். நீர் யாருடைய அடிமை? என்று நான் அந்த சிறுவரிடம் கேட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அப்போது குரைஷியரின் இன்ன நபரின் அடிமை ஆவேன் என்று அந்த நபரின் பெயரை அவன் குறிப்பிட்டான். நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். உமது ஆடுகளிடம் சிறிது பால் இருக்குமா? என்று நான் அவனிடம் கேட்டேன். அதற்கு அவன், ஆம்! என்று கூறினான். எமக்காக நீர் சிறிது பாலை கரப்பீரா? என்று நான் கேட்டேன். அதற்கு ஆம் என்று அவர் கூறினார். எனவே நான் அவரிடம் பாலை கரப்பதற்காக கூறினேன். அவர் தமது ஆடுகளில் ஓர் ஆட்டின் காலை விலக்கி அதன் மத்தியில் பிடித்துக் கொண்டான். அதன் காம்புகளை நன்றாக சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான் கூறினேன். பின்னர் எனது மேற்பார்வையில் பாலை ஊற்றச் செய்தேன். ஓரளவிற்கு பாலின் தன்மை சிறிது குறைந்து விட வேண்டும் என்பதற்காக அதில் தண்ணீரை ஊற்றினேன். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அந்தப் பாலை முன் வைத்தேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பாலை எடுத்துக் கொண்டு ஆஜரானபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தார்கள் என்று சில அறிவிப்புகளில் வருகின்றது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓய்வில் பாதிப்பு ஏற்படுவதை உகந்ததாக கருதவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண் விழிக்கும் வரை காத்திருந்தார்கள். கண் விழித்தபோது பாலை கொடுத்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதனை அருந்துங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு பருகினார்கள் என்றால் அதனால் நான் மகிழ்ச்சி அடைந்தேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! புறப்படுவதற்கான நேரம் வந்து விட்டது என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) அவர்கள்,

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

ஆம்! என்று கூறினார்கள். அல்லது மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. இனி பயணத்தை மீண்டும் தொடங்கி விடலாமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஆம்! எனது எஜமானரே! என்று பதில் கூறப்பட்டது. இவ்வாறு மீண்டும் பயணம் தொடங்கியது.

(சஹீஹ் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) ஹதீஸ் எண் 3652)

சுராக்கா பின் மாலிக் பின்தொடர்ந்த சம்பவம் இவ்வாறாகும். உரைகித்ஜீ என்ற இடத்திலிருந்து துப்பறிவதில் நிபுணரான ஒருவரின் மேற்பார்வையில் கடற்கரையோர ஊர்களின் பக்கம் மதீனாவிலிருந்து இந்தப் பயணம் தொடங்கி இருந்தது. அது மதீனாவிற்கான பொது வழியிலிருந்து வேறுபட்ட வழியாக இருந்தது. மக்கா மற்றும் அதன் சுற்று வட்டார ஊர்களில் 100 ஒட்டகங்களுக்கான பரிசு பொதுவாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வளவு பெரிய தொகை தங்களுக்கு கிடைத்து விட வேண்டுமென ஏராளமான மக்கள் விரும்பினர்.

சுராக்கா பின் மாலிக் அறிவிக்கின்றார்கள்: பிற்காலத்தில் அன்னார் முஸ்லிமாகி இருந்தார்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அன்னார் இந்த சம்பவத்தை சுயமே இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: எங்களிடத்தில் குரைஷிய நிராகரிப்பாளர்களின் தூதுவர் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகிய இருவருக்குமுரிய தொகையை அவர்கள் நிர்ணயித்திருந்தார்கள். அவர்களை யார் கொலை செய்வார்களோ அல்லது உயிருடன் பிடித்து வருவார்களோ அவர்களுக்கு இவ்வளவு தொகை என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

சுராக்கா கூறுகின்றார்கள்: நான் பனூ முத்லிஜ் என்ற எனது சமுதாயத்தின் ஒரு சபையில் அமர்ந்திருந்தேன். ஒரு நபர் எனக்கு முன்னால் வந்தார். எங்களுக்கு முன் நின்று கொண்டார். அப்போது நாங்கள் அமர்ந்திருந்தோம். அப்போது சுராக்காவே! நான் கடற்கரையோரத்தில் சில நிழல்களைக் கண்டுள்ளேன் என்றோ அல்லது மூன்று நபர்களைக் கொண்ட ஒரு குழுவினர் செல்வதைக் கண்டேன் என்றோ அவர் கூறினார். அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களாகவே இருப்பார்கள் என்பது எனது எண்ணமாகும் என்றும் கூறினார்.

சுராக்கா பின் மாலிக் கூறுகின்றார்கள்: உண்மையில் அது முஹம்மது (ஸல்) அவர்களின் குழுவே ஆகும் என்று நான் அறிந்து கொண்டேன். ஆயினும் பரிசு தொகையில் என்னுடன் வேறொருவர் பங்கு பெறுவதை நான் விரும்பி இருக்கவில்லை. எனவே நான் உடனடியாக அந்த சந்தர்ப்பத்தின் சூழ்நிலையை சமாளித்தேன். மேலும் மௌனமாக இருக்கும்படி இந்த விஷயத்தை கூறியவரிடம் கண்களால் சைகை செய்தேன். மேலும் இல்லை! இல்லை! அது முஹம்மது (ஸல்) அவர்களின் குழுவாக இருக்க முடியாது. மாறாக, யாரைப் பற்றி நீர் கூறுகின்றீரோ அவர் தற்போது எங்களுக்கு முன்பு தான் கடந்து சென்றார் என்று நான் கூறினேன். அவர் தமது தொலைந்துபோன ஒட்டகத்தை தேடிக் கொண்டு சென்று கொண்டிருக்கும் பனூ ஃபலான் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றும் கூறினேன்.

சுராக்கா கூறுகின்றார்கள்: எவருக்கும் சந்தேகம் ஏற்படாமல் இருக்க நான் சிறிது நேரம் அந்த சபையில் இருந்தேன். பின்னர் வேகமாக ஓடக் கூடிய எனது இன்ன குதிரையை அழைத்துக் கொண்டு வீட்டின் பின் பக்கம் இன்ன இடத்திற்கு வந்து நிற்குமாறும், எனக்காக காத்திருக்குமாறும் நான் எனது பணிப்பெண்ணிடம் கூறினேன். சிறிது நேரம் கழித்து அவர் அங்கு வந்தடைந்து விட்டார். நான் குறி பார்த்தேன். ஆனால் அந்த பயணத்திற்கு எதிராகவே குறி வந்தது. ஆனால் நான் அதனைப் பொருட்படுத்தவில்லை. குதிரையை வேகமாக ஓட்டிக் கொண்டு சென்று விட்டேன். மேலும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் குழு என்று நான் கருதி இருந்த அந்த குழுவை பின் தொடர்ந்து சென்றேன்.

சுராக்கா கூறுகின்றார்கள்: பல இடங்களை ஒவ்வொன்றாக கடந்து விரைவாகவே அக்குழுவிற்கு அருகே சென்றடைந்து விட்டேன். இன்னும் சிறிதளவே இடைவெளி இருந்தது. அதற்குள் எனது குதிரை வழக்கத்திற்கு மாற்றமாக தடுமாற்றம் அடைந்தது. நான் குதிரையிலிருந்து கீழே விழுந்து விட்டேன். பின்னர் நான் எழுந்து நின்றேன். மேலும் நான் குறி பார்த்தேன். குறியானது எனது எண்ணத்திற்கு எதிராகவே வெளிப்பட்டது. ஆயினும் முஹம்மது (ஸல்) அவர்களை திருப்ப அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும். 100 ஒட்டகங்களுக்கான பரிசைப் பெற வேண்டும் என்று நான் விரும்பி இருந்தேன். பின்னர் நான் எழுந்தேன். மேலும் குதிரையின் மீது சவாரி செய்து கொண்டேன். மேலும் தற்போது எந்த அளவிற்கு நான் அருகில் சென்று விட்டேன் என்றால் இவர் முஹம்மது (ஸல்), இவர் அபூபக்ர் (ரலி) என்று நான் அடையாளம் மட்டும் கண்டு கொண்டிருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஏதோ ஓதிக் கொண்டிருந்த சப்தமும் எனக்கு வந்து கொண்டிருந்தது. அதற்குள் எனது குதிரை மிக மோசமாக தடுமாற்றம் அடைந்தது. அதன் கால்கள் மண்ணில் புதைந்து விட்டன. மேலும் நான் குதிரையிலிருந்து விழுந்து விட்டேன். பின்னர் நான் குதிரையை திட்டினேன். எழுந்து நின்றேன். அதாவது குதிரையை ஏசிப் பேசினேன். மேலும் எழுந்து நின்றேன். குதிரையால் மண்ணிலிருந்து தனது கால்களை வெளியே எடுக்க முடியவில்லை. முதலில் அது நேராக எழுந்து நின்றபோது அதன் இரு கால்களிலிருந்தும் தூசி கிளம்பி விண்ணில் அது புகையைப் போன்று பரவி விட்டது. அது எந்த அளவிற்கு மண்ணில் சிக்கியிருந்தது என்றால் மண்ணிலிருந்தோ அல்லது மணலில் இருந்தோ கால்கள் வெளியேற்றப்பட்டபோது தூசி கிளம்பி விட்டது.

சுராக்கா கூறுகின்றார்கள்: தற்போது நான் மீண்டும் அம்புகளால் குறி பார்த்தேன். அப்போதும் நான் விரும்பியிருக்காத விஷயமே வெளிப்பட்டது. மேலும் நான் அங்கிருந்தே அடைக்கலத்திற்கான குரல் கொடுத்தேன். என் புறமிருந்து உங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் என்ன விரும்புகின்றார்? என்று அவரிடத்தில் கேட்கும்படி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அப்போது நான் சுராக்கா ஆவேன். நான் தங்களிடம் பேச விரும்புகின்றேன் என்று கூறினார். அப்போது அவர்கள் நின்று விட்டனர். மக்காவாசிகள் உங்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துச் சென்றால் 100 ஒட்டகம் வழங்கப்படும் என்று பரிசு அறிவித்துள்ளார்கள். நான் பேராசையில் தங்களைப் பின்தொடர்ந்து இங்கு வந்துள்ளேன். ஆயினும் என்னுடன் நடந்தவற்றை வைத்து பார்க்கும்போது நான் இவ்வாறு பின்தொடர்வது சரியல்ல என்ற நம்பிக்கையில் நான் வந்து விட்டேன் என்றும் அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வழிப்பாதை, உணவு போன்றவற்றிற்கான விஷயத்தையும் அவர் முன் வைத்தார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை. எங்களைப் பற்றி எவருக்கும் கூறாதீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவர் அதற்கு வாக்குறுதி அளித்தார். அத்துடன் தாங்கள் ஒரு நாள் அரசாட்சியை பெறுவீர்கள் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது என்றும் கூறினார். அப்போது நான் தங்கள் சமூகத்தில் ஆஜராகும்போது என்னுடன் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ளப்பட வேண்டும் எனக்கு ஏதாவது உறுதிமொழியை எழுதிக் கொடுக்கும்படியும் அவர் வேண்டினார்.

சில அறிவிப்புகளின்படி அடைக்கலத்திற்கான எழுத்துப்பூர்வ உறுதிமொழியை தரும்படி அவர் விண்ணப்பித்திருந்தார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை எழுதிக் கொடுத்தார்கள் என்றும், மற்றோர் அறிவிப்பின்படி ஆமிர் பின் புஹைரா எழுதிக் கொடுத்தார்கள் என்றும் வருகிறது. அவர் அந்த மடலை எடுத்துக் கொண்டு திரும்பிச் சென்று விட்டார்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3906)

இன்ஷா அல்லாஹ் இன்னும் எதிர்வரும் நாட்களிலும் இந்த நற்குறிப்பு தொடரும்.

நாளை இன்ஷா அல்லாஹ் புது வருடமும் ஆரம்பமாகின்றது. அல்லாஹ் வரக் கூடிய புதிய வருடத்தை ஒட்டுமொத்த அளவில் ஜமாஅத்திற்கும் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. எல்லா வகையான தீங்கிலிருந்தும் ஜமாஅத்தை பாதுகாப்பானாக. ஜமாஅத்திற்கு எதிரான எதிரியின் எல்லா திட்டங்களையும் மண்ணோடு மண்ணாக்குவானாக. மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்துள்ள அந்த வாக்குறுதிகள் நமது வாழ்க்கையிலேயே அதிகமாக நிறைவேறுவதை நாமும் பார்ப்போமாக. அல்லாஹ் நமக்கு இந்த காட்சியையும் காட்டுவானாக. எனவே அதிகமாக துஆக்கள் செய்து கொண்டிருங்கள்.

புதிய வருடத்தில் துஆக்கள் செய்தவாறு நுழையுங்கள். தஹஜ்ஜுத் தொழுகைக்கான சிறப்பு ஏற்பாட்டையும் செய்யுங்கள். சில பள்ளிவாசல்களில் நடைபெறவும் செய்கின்றது. மற்றபடி எங்கு ஏற்பாடு இல்லையோ அங்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஜமாஅத் அளவில் இல்லையென்றாலும் கூட தனிப்பட்ட முறையிலும், வீட்டிலும் தஹஜ்ஜுத் தொழுகைக்காக சிறப்பான ஏற்பாடு செய்ய வேண்டும். துஆ செய்ய வேண்டும். முதலில் இது நிரந்தர பழக்கமாக இருக்க வேண்டும். ஆயினும் நாளையிலிருந்து தொழும்போதும் அல்லது இன்று

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

இரவிலிருந்து தொழும்போதும் அதனை வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக ஆக்கிக் கொள்வதற்கும் முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக.

தரூது ஷரீஃப் ஓதுதல் மற்றும் இஸ்திக்ஃபார் செய்தல் மட்டுமின்றி இந்த துஆக்களையும் அதிகமாக ஓதுங்கள். رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِن لَّدُنكَ رَحْمَةً إِنَّكَ أَنتَ الْوَهَّابُ எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. மேலும் உன் புறமிருந்து எங்களுக்கு கருணையை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே அதிகம் வழங்கக் கூடியவனாவாய்.

அடுத்து இந்த துஆவையும் அதிகமாக ஓதி வாருங்கள். رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِي أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ எங்கள் இறைவா! எங்களது பாவத்தை மன்னிப்பாயாக. மேலும் எங்களது விவகாரங்களில் எங்களது வரம்பு மீறுதல்களையும் மன்னிப்பாயாக. மேலும் எமது பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கின்ற சமுதாயத்திற்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் அதற்கு நற்பேறு வழங்குவானாக.

நான் தொழுகைகளுக்குப் பிறகு சில ஜனாஸா காயிப் தொழுகைகளையும் நடத்துவேன். தற்போது அவர்களின் நற்குறிப்பை செய்ய விரும்புகின்றேன். முதல் நற்குறிப்பு மதிப்பிற்குரிய மலிக் ஃபாரூக் கோகர் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் முல்தான் மாவட்டத்தின் அமீராக இருந்துள்ளார்கள். டிசம்பர் 18 ஆம் தேதி 80 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் தந்தையான மதிப்பிற்குரிய மலிக் உமர் அலி கோகர் சாஹிப் முல்தான் தலைவர் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். அன்னாரின் தாயார் பெயர் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா ஆகும். அன்னார் ஸய்யிதா பேகம் என்ற பெயரால் அறியப்பட்டு வந்தார்கள். ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் அவர்களின் மகளாக அன்னார் இருந்தார்கள். ஹஸ்ரத் மலிக் உமர் அலி சாஹிப் அவர்கள் தமது இளமைப் பருவத்தில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்களின் காலத்தில் காதியான் சென்று அன்னாரிடத்தில் பைஅத் செய்வதற்கு நற்பேறு பெற்றார்கள். மலிக் உமர் அலி சாஹிப் அவர்களின் மரணம் விரைவாக நிகழ்ந்து விட்டது. அந்த நேரத்தில் மலிக் ஃபாரூக் அஹ்மது சாஹிப் சுமார் 20, 25 வயதுடையவராக இருந்தார்கள். இளைஞராக இருந்தார்கள். விவசாயம் மட்டுமின்றி கராச்சியிலும் மலிக் சாஹிப் அவர்களுக்கு சில வியாபாரம் இருந்தது. அதனை அன்னார் மிகவும் அழகிய முறையில் நிர்வகித்தார்கள். மேலும் தமது தாய், தந்தையை மற்றும் சகோதர, சகோதரிகளையும் அன்னார் பராமரித்தார்கள். மலிக் ஃபாரூக் கோக்கர் சாஹிப் நீண்ட காலம் முல்தான் மாவட்ட காயித் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆக இருந்துள்ளார்கள். பின்னர் மீண்டும் முல்தான் மண்டலத்தின் காயித் ஆகவும் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார் 1980 முதல் 1985 வரை முல்தான் மாவட்ட அமீராகவும் தொண்டாற்றும் நற்பேறை பெற்றார்கள். இதற்கிடையில் அன்னார் முல்தான் நகரத்தின் அமீர் என்ற ரீதியிலும் தொண்டாற்றும் நற்பேறு பெற்று வந்தார்கள். அன்னாரின் திருமணம் 1968 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மிர்ஸா அஸீஸ் அவர்களின் மகள் தர்தானா சாஹிபா அவர்களுடன் நடந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நிக்காஹ்வை நடத்தி வைத்தார்கள். அல்லாஹ் அன்னாருக்கு ஒரு மகனையும், ஐந்து மகள்களையும் வழங்கி இருந்தான்.

மர்ஹூமின் மனைவி இவ்வாறு கூறுகின்றார்கள்: மர்ஹூம் மிகவும் அன்பு கொள்ளக் கூடியவராகவும், கருத்தில் கொள்பவராகவும் இருந்தார்கள். சிறிய சிறிய விஷயங்களையும் கருத்தில் கொண்டார்கள். தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுகைக்காக என்னையும் தினமும் எழுப்பி வந்தார்கள். அன்னார் மரணமடைந்த நாளன்று இரவிலும் நஃபில் தொழுதார்கள். தொழுது விட்டு பின்னர் தூங்கி விட்டார்கள். எப்போதும் வுளூவுடன் இருப்பதற்கு முயற்சி செய்து வந்தார்கள். அன்னார் அமீர் ஜமாஅத்தாக இல்லாத நேரத்தில் கூட ஓர் அஹ்மதிக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டால் தொலைபேசியில் அழைத்து எந்த நேரத்திலும் ஏதாவது பணி கூறினால் உடனடியாக பணிக்காக தயாராகி விடுவார்கள். அன்னார் ஜமாஅத்தின் அமீராக ஆகி விட்டபோது எனக்கு இவ்வாறு கட்டளையிட்டிருந்தார்கள். அதாவது எப்போதும் உணவு மற்றும் தேநீருக்கான ஏற்பாடு தயாராக இருக்க வேண்டும். எந்நேரத்திலும் ஏதாவது விருந்தினர் வந்து விடக் கூடும் என்று கூறியிருந்தார்கள். விருந்தினர்கள் இன்றி எங்களது வீடு இருந்ததாகவோ அல்லது யாராவது ஒருவர் நிரந்தரமாக வீட்டில் வந்து தங்காமல் இருந்ததாகவோ எனக்கு நினைவு இல்லை. சில முரப்பிமார்களையும் கூட வீட்டிலேயே தங்க வைத்திருந்தார்கள். வீட்டில் இருந்த விஷயங்கள் எல்லாம் அலுவலகமாகவே மாறி இருந்தது.

மிகவும் திறந்த மனமுடையவராகவும், உள்ளத்தால் நேசிக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். அனைத்து அஹ்மதி அல்லாத உறவினர்களையும் இன்னும் கூறப்போனால், முழு கோக்கர் குடும்பத்தினரையும் அன்னார் மிகவும் மதித்து மரியாதை செலுத்தி வந்தார்கள். நேசித்து வந்தார்கள். அவர்கள் எப்போதும் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். அல்லாஹ்வின் அருளால் திருக்குர்ஆன் திலாவத் நல்ல முறையில் அமைந்திருந்தது. நான் திலாவத் செய்து வந்தபோது எனது திலாவத்தை திருக்குர்ஆன் திறந்து காட்டி திருத்தம் செய்வார்கள்.

அன்னாரின் மகன் தல்ஹா இவ்வாறு கூறுகின்றார்: தனது இரண்டு தாயையும் மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள். ஒருபோதும் எந்த வேறுபாடும் காட்டவில்லை. மேலும் தனது அனைத்து சகோதர, சகோதரிகளின் திருமணத்தையும் தானே சுயமே நடத்தினார்கள். அன்னாரின் வீடு எப்போதும் அன்னாரின் உள்ளத்தைப் போன்று எல்லோருக்காகவும் திறந்திருந்தது. குறிப்பாக ஜமாஅத்திற்காக, வாழ்க்கையை அர்ப்பணித்த மக்களுக்காக திறந்திருந்தது. அன்னாரின் ஒரு வீடு அடுத்த தெருவில் இருந்தது. ஜமாஅத்திற்காக நான் அதை கட்டியுள்ளேன் என்று அன்னார் கூறி வந்தார்கள். ஒருபோதும் எவரையும் மறுத்ததில்லை. எவரெல்லாம் அங்கு சென்று தங்க விரும்பினாரோ அவர் தங்கி வந்தார்.

அன்னார் கூறுகின்றார்கள்: 1984 ஆம் ஆண்டு அரசாங்க கட்டளைக்குப் பிறகு சோதனைக்குரிய காலகட்டத்தில் இறை அருளால் மிகவும் தனித்தன்மையான தைரியத்துடன் முல்தான் மாவட்டம் மற்றும் நகரத்தின் அனைத்து தோழர்களையும் அன்னார் சந்தித்து எப்போதும் தைரியம் வழங்கி வந்தார்கள். ஒருபோதும் பலவீனமாக விட்டதில்லை. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஹிஜ்ரத்திற்கான பயணம் இருந்தது. அல்லாஹ்வின் அருளால் மர்ஹூமிற்கு ஹுஸூர் அவர்களின் பயணக் குழுவில் பங்கு பெறுவதற்கு நற்பேறு கிடைத்தது. ஓரிடத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் பயணக் குழுவை வழி நடத்தினார்கள். சரியான பாதையை காட்டிக் கொடுத்தார்கள்.

அன்னாரின் மகன் எழுதியுள்ளார்: அப்பா அமீராக இருந்த காலத்தில் எங்களது வீடு எப்போதும் அலுவலகமாகவே ஆகி இருந்தது. மிகவும் ஒளிமயமாக இருந்தது. விவசாய பணியை தனது இளைய சகோதரரிடம் ஒப்படைத்து விட்டார்கள். மேலும் தமது முழு நேரத்தை மார்க்கத்திற்காக அர்ப்பணித்து விட்டார்கள். எல்லாரிடமும் எளிமையாக பழகி வந்தார்கள். அஹ்மதி அல்லாத உறவினர்களுக்கும் பொருளாதார உதவிகள் செய்து வந்தார்கள்.

அவர் கூறுகின்றார்: அன்னாரின் ஜனாஸாவில் எங்களது சில உறவினர்கள் வந்தார்கள். அவர்கள் நாங்கள் வாரிசற்றவர்களாக ஆகி விட்டோம் என்று அழுது கொண்டே கூறிக் கொண்டு சென்றார்கள். ஏனென்றால் மர்ஹூம் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

மேலும் அவர் கூறுகின்றார்: எப்போதும் எங்களுக்கு தொழுகைக்கான அறிவுரையை செய்து வந்தார்கள். குறிப்பாக ஃபஜர் தொழுகையை தொழும்படி கவனமூட்டினார்கள்.

அன்னாரின் இளைய மகள் ஃபாயிஸா கூறுகின்றார்: அப்பாவிற்கு அல்லாஹ்வின் மீது இருந்த நிச்சய உறுதி எங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்தது. எல்லா வகையான காலத்தையும் பார்த்தார்கள். இளமையில் அனாதையாகி விட்டார்கள். எல்லா வகையான சூழலையும் கண்டார்கள். கஷ்டத்தையும் பார்த்தார்கள். செழிப்பையும் பார்த்தார்கள். வறுமையையும் பார்த்தார்கள். மகிழ்ச்சியையும் பார்த்தார்கள். ஆனால் நான் குழந்தைப் பருவம் முதலே இதனைப் பார்த்து வந்துள்ளேன். எனது எல்லா பணியையும் அல்லாஹ் சுயமே செய்கின்றான் என்று அல்லாஹ்வின் மீதான நிச்சய உறுதியினால் எப்போதும் வெளிப்படையாக அப்பா கூறி வந்தார்கள்.

தொடர்ந்து அன்னாரின் மகள் கூறுகின்றார்: அப்பாவிற்கு கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு இருந்தது. மேலும் கிலாஃபத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு அழுது விடுவார்கள். அன்னாருக்கும் ஒரு சோதனை வந்தது. அதனையும் அன்னார் மிகவும் பொறுமையுடனும் துஆவுடனும் கடந்தார்கள்.

அன்னாரது இரண்டாவது தாயின் மகனும் அன்னாரது இளைய சகோதரருமான மலிக் தாரிக் அலி கோகர் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: எனது வயது 9 ஆக இருந்தது. அப்போது எனது தந்தை மரணமடைந்து விட்டார்கள். எனது மூத்த சகோதரரான மலிக் ஃபாரூக் சாஹிப் அவர்களின் வயது 22 ஆக இருந்தது. அன்னார் இளைஞராக

இருந்தார்கள். ஆனால் அன்னார் எங்களை தந்தையைப் போன்று பாதுகாத்தார். முழு வாழ்நாளிலும் எனக்கு தந்தை இல்லையே என்ற உணர்வை ஏற்பட விடவில்லை.

அடுத்து அன்னார் எழுதுகின்றார்கள்: அஹ்மதியல்லாத உறவினர்களிடம் அன்னாரின் சிறப்பான திகில் இருந்தது. அவர்களையும் மர்ஹூம் மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள். எண்ணற்ற அஹ்மதி குடும்பங்களை பராமரித்து வந்தார்கள். ஏராளமான பிள்ளைகளுக்கு கல்வி கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுத்துள்ளார்கள். எனது சகோதரர் எல்லா தேவையுடையவருக்கும் கடன் கொடுத்து வந்தார். ஒருபோதும் அதனை திருப்பிக் கொடுக்கும்படி கேட்டதில்லை. எப்போதும் மிக அழகிய கடன் என்ற எண்ணத்திலேயே கொடுத்து வந்தார் என்று அன்னார் கூறுகின்றார்கள்.

ஏராளமான புதிய அஹ்மதிகள் கூறுகின்றனர்: நாங்கள் அஹ்மதிய்யத்தில் நுழைந்த பிறகு எங்களை மலிக் ஃபாரூக் அஹ்மது கோக்கர் சாஹிப் அவர்கள் தம்மவர்களைப் போன்று பாதுகாத்து எங்களது தேவைகளை கருத்தில் கொண்டார்கள். 80 வயது அன்னாருக்கு ஆகி இருந்தது. ஆனால் கடந்த இரண்டு வருடமாக தனது சொத்துக்களின் பங்கை வழங்கி விட வேண்டும் என்று அன்னார் கூறி வந்தார்கள். அதிகமான ஹிஸ்ஸா ஜாயிதாத் கொடுக்க விரும்பினார்கள். சில தொகை எஞ்சியிருந்தது. அல்லாஹ் அவர்களின் பிள்ளைகளுக்கு பாக்கியை கொடுப்பதற்கு நற்பேறை வழங்குவானாக.

அன்னாரின் சகோதரி தாஹிரா இவ்வாறு கூறுகின்றார்கள்: இவரும் இரண்டாவது தாயின் மூலம் பிறந்த சகோதரி ஆவார். எனது சகோதரர் எப்போதும் என்னுடன் ஒரு பரிவுமிக்க தந்தையைப் போன்று நடந்து கொண்டார். அன்னார் ஒருபோதும் சொந்த மற்றும் ஒன்றுவிட்ட சகோதரி என்ற பாகுபாட்டை காட்டியதில்லை. இதுவே அன்னாரின் மிகப் பெரிய சிறப்பாக இருந்தது. அனைத்து சகோதர, சகோதரிகளுடனும் ஒன்றுபோல் நடந்து கொண்டார்கள். இரண்டு தாயுடனும் சரி சமமாக நடந்து கொண்டார்கள். எங்களது தாய்கள் வேறு வேறு என்பதை அவர்கள் ஒருபோதும் உணரச் செய்ததில்லை. அன்னார் உண்மையாகவே எனது தந்தையின் இடத்தில் இருந்தார்கள். எவ்வாறு ஒரு தந்தை மௌனமாக தனது மகளின் மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் உதவி செய்வாரோ முற்றிலும் அதேபோன்று அன்னார் என்னுடன் தொடர்பு வைத்திருந்தார்கள்.

அடுத்து அன்னாரின் மகள் நமூதே ஸிஹ்ர் கூறுகின்றார்கள்: சில விஷயங்கள் அப்பாவின் வாழ்க்கையில் மிகவும் வெளிப்படையாக இருக்கின்றன. மீண்டும் மீண்டும் நினைவு வருகின்றது. அப்படிப்பட்ட விஷயங்களில் அன்னாரின் விருந்து உபசரிப்பு மற்றும் மக்களுடன் நேசத்திற்கான தொடர்பு ஆகும். விருந்து உபசரிப்பின் நிலை எவ்வாறிருந்தது என்றால் வீட்டில் உணவு சமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும். விருந்தினர்கள் வந்து விடுவர். உண்பதற்காக குடும்பத்தினர் அமர்ந்திருப்பார்கள். ஆனால் அதே உணவு வெளியில் விருந்தினருக்கு சென்று விடும். பின்னர் குடும்பத்தினர் முட்டையை பொறித்து சமாளித்துக் கொள்வார்கள்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: வாழ்க்கையில் ஏராளமான தவறுகள் நடக்கும். மனிதனிடம் கூடுதல் குறைவு ஏற்பட்டு விடும். அதன் காரணமாக சில சோதனைகளையும் அன்னார் கடக்க நேரிட்டது. ஆனால் ஒருபோதும் கிலாஃபத்தைக் குறித்து தவறான விஷயத்தை அன்னார் பேசியதில்லை. அதாவது காலத்தின் கலீஃபா ஏதோ தவறான தீர்ப்பு வழங்கி விட்டார் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படும் அளவிற்கு அன்னார் எதையும் பேசியதில்லை. எங்கள் வீட்டில் எப்போதும் குத்பா கேட்பதற்கும், ஜமாஅத்துடன் தொடர்பு வைப்பதற்கும் சிறப்பான ஏற்பாடு இருந்து வரும்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் நன்மைகளின் முன்னேறுவதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் இந்தோனேஷியாவைச் சார்ந்தவர் ஆவார்கள். 66 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

கிழக்கு ஜாவாவில் அன்னார் பிறந்தார்கள். 1980 ஆம் ஆண்டில் இந்தோனேஷிய ஜமாஅத்தின் முன்னாள் ரயீசுத் தப்லீக் மதிப்பிற்குரிய சயூத்தி அஸீஸ் சாஹிப் அவர்கள் மூலமாக பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். 1993 ஆம் ஆண்டில் வஸிய்யத் அமைப்பில் இணைந்தார்கள். அங்கு காரன்ங் தீனங்கா என்ற ஜமாஅத் உள்ளது. தமது மரணம் வரை அங்கு அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்து வந்தது. தமது நினைவாக ஒரு மனைவி மட்டுமின்றி மூன்று பிள்ளைகளும், ஆறு மகள்வழிப் பேத்திகளும் உள்ளனர்.

அன்னாரின் மனைவி எழுதுகின்றார்கள்: மர்ஹூம் ஒரு கனவை கண்டிருந்தார். அன்னார் அந்த கனவில் மக்களின் ஒரு பெரும் கூட்டத்திற்கு மத்தியில் வரிசையில் நிற்பதாக தம்மைக் கனவில் கண்டார். கனவில் யாரோ ஒருவர் அன்னாரிடம் எந்த வரிசையில் நான் இணைவது? என்று கேட்டார். ஒருவர் ஒரு வரிசையைக் காட்டி சைகை செய்தார். அதில் ஒரு தூய ஊர் உள்ளது என்று கூறினார். மர்ஹூம் அந்த புனித நபரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அன்னார் கனவில் எந்த தூய மனிதரைப் பார்த்திருந்தார்களோ அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களாக இருந்தார்கள் என்பது சிறிது காலத்திற்குப் பிறகு தெரிய வந்தது. இதன் காரணமாக மர்ஹூம் ஜமாஅத்தின் உண்மையை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். பின்னர் பைஅத்தும் செய்து விட்டார்கள்.

அன்னாரின் மகள் இவ்வாறு கூறுகின்றார்: மர்ஹூம் பைஅத்திற்குப் பிறகு உள்ளூர் ஜமாஅத் அளவில் மட்டுமின்றி உள்ளூர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்விலும் தொண்டாற்றி வந்தார்கள். எதிரிகள் புறமிருந்து ஜமாஅத்தின் மீது தாக்குதலும் நடந்து வந்தன. மிரட்டல்களும் கிடைத்து வந்தன. எனினும் மர்ஹூம் மிகவும் வீரத்துடன் ஜமாஅத்தின் சார்பாக எதிர்கொண்டார்கள். மிகவும் வள்ளலாக இருந்தார்கள். யாராவது ஒருவர் உதவி வேண்டியோ அல்லது கடன் கேட்டோ வந்தால் எப்போதும் உதவி செய்து வந்தார்கள்.

அன்னாரின் மூன்றாவது மகள் இவ்வாறு எழுதியுள்ளார்: கிலாஃபத்தின் மீது எல்லையற்ற நேசம் கொண்டவராக இருந்தார்கள். மிகவும் கட்டுப்பட்டவராக இருந்தார்கள்.

இந்தோனேஷியா அமீர் அப்துல் பாஸித் சாஹிப் எழுதுகின்றார்கள்: கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடன் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்கள். அங்கு மேற்கு ஜாவாவின் ஒரு நகரத்தில் நமது ஜமாஅத் ஒன்று உள்ளது. அங்கு சிலமுறை ஜமாஅத் எதிரிகள் ஜமாஅத்தின் மீதும், பள்ளிவாசலின் மீதும் தாக்குதல் நடத்தி வந்தனர். உள்ளூர் அரசாங்கத்திடம் ஜமாஅத்தின் மீது தடைகளை விதிப்பதற்கு கூறி வந்தனர். அப்போது ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் மிகவும் வீரத்துடன் எதிரிகளையும், உள்ளூர் அரசாங்கத்தையும் எதிர்கொண்டார்கள். அவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் கொடுத்தார்கள். மர்ஹூமின் முயற்சியின் காரணமாக அங்கு தற்போது ஜமாஅத் நிலைபெற்றுள்ளது. எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மையை தொடரச் செய்வதற்கு நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு காஷ்மீரின் யாரிபூராவைச் சேர்ந்த அல்ஹாஜ் அப்துல் ஹமீத் டாக் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் டிசம்பர் 24 ஆம் தேதி 94 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். மர்ஹூம் யாரிபூராவைச் சேர்ந்த முஹம்மது அக்ரம் டாக் சாஹிபின் மகனாக இருந்தார்கள். அன்னார் அந்தப் பகுதியின் ஆரம்பகால அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். மர்ஹூம் மிகவும் நல்ல மென்மையான இயல்பு படைத்தவராகவும், இன்முகத்துடன் எல்லாரையும் சந்திப்பவராகவும், எல்லாரின் அன்பைப் பெற்றவராகவும், பக்குவமடைந்த மற்றும் அமைதியான இயல்பைக் கொண்ட சான்றோராகவும் இருந்தார்கள்.

நீண்ட காலம் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். ஜம்மூ காஷ்மீர் மாநில அமீராக மட்டுமின்றி மாவட்ட அமீராகவும், நாஸிம் அன்ஸாருல்லாஹ் ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். உள்ளூர் ஜமாஅத்தில் உள்ளூர் பொறுப்புகளிலும் தொண்டாற்றி வந்துள்ளார்கள். ஆண்டாண்டு காலமாக அன்ஜுமன் தஹ்ரீகே ஜதீத் இந்தியாவின் கௌரவ உறுப்பினராகவும், ஊழியராகவும் இருந்தார்கள்.

அன்னாரின் காலத்தில் மாநில அமாரத் காலகட்டத்தில் 1987 ஆம் ஆண்டில் காஷ்மீரில் ஜமாஅத்தின் ஐந்து பள்ளிக் கூடங்கள் நிறுவப்பட்டன. ஏராளமான பள்ளிவாசல்கள் மற்றும் மிஷன்ஹவுஸ் கட்டுமானப் பணிகளில் அன்னார் அதிகம் உழைத்துள்ளார்கள். இளைஞர்களின் அறிவார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதற்காகவும், அதிகரிப்பதற்காகவும் அன்னார் போதுமான முயற்சிகளை செய்து வந்தார்கள். அந்தப் பணியில் எப்போதும் முன்னனியில் இருந்து வந்தார்கள். யாரிபூரா பகுதியில் அன்னாரின் சமூகத் தொண்டுகளின் காரணமாக மக்களுக்கு மத்தியில் அன்னாருக்கு மிகுந்த மரியாதை இருந்தது.

அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் அடுத்த தலைமுறையையும் நல்லவர்களாகவும், சாலிஹானவர்களாகவும் ஆக்குவானாக. தொண்டாற்றுவதற்கு நற்பேறு வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

இதன் பிறகு அங்கு ஹிஜ்ரத்திற்கான அனைத்து செயல் திட்டங்களும் தயார் செய்யப்பட்டன. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதே நோக்கத்திற்காக நான் இரண்டு ஒட்டகங்களை விலைக்கு வாங்கி வைத்துள்ளேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவற்றில் ஒன்றை தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அப்போது தொகை கொடுத்தே வாங்குவேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொகையை பெறும்படி வலியுறுத்தியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அதைப் பெறுவதைத் தவிர வேறு எந்த வழியும் இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இரண்டு ஒட்டகங்களை 800 திர்ஹம் விலைக்கு வாங்கி இருந்தார்கள். 400 திர்ஹம் விலையில் ஓர் ஒட்டகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். மற்றோர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 800 திர்ஹம் விலை கொடுத்து அந்த ஒட்டகத்தை வாங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 1 பக்கம் 382 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முதலில் தவ்ர் குகைக்கு செல்ல வேண்டும். மூன்று நாட்கள் அங்கேயே தங்க நேரிடும் என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் மக்காவின் நான்கு திசைகளையும் நன்கு அறிந்த எல்லா பாலைவன வழிப்பாதைகளையும் அறிந்த ஒரு நிபுணரை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனவே அப்துல்லாஹ் பின் உரைகத் என்பவருடன் பேச்சுவார்த்தை நடந்தது. அந்த நபர் இணை வைப்பவராக இருந்தார். எனினும் கண்ணியமிக்கவராவும், பொறுப்புணர்வு கொண்டவராகவும், நேர்மையான மனிதராகவும் இருந்தார்.

வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்கள் இது குறித்து எழுதுகின்றனர்: அந்த நபர் முஸ்லிமாக இருக்கவில்லை என்றாலும் ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அவர் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். எவ்வாறிருப்பினும் அவரிடத்தில் 3 ஒட்டகங்கள் கொடுக்கப்பட்டன. அவர் 3 நாட்களுக்குப் பிறகு தவ்ர் குகைக்கு அதிகாலையில் வந்து விட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு விழிப்புணர்வுமிக்க இளைஞராக இருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் அவர்களிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதாவது அவர் தினமும் மக்காவின் சபைகளில் சுற்றித் திரிந்து என்ன நடந்து கொண்டிருக்கின்றது? என்பதை ஆய்வு செய்து வர வேண்டும். பின்னர் இரவில் தவ்ர் குகையை அடைந்து முழு அறிக்கையையும் கொடுக்க வேண்டும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு பொறுப்புமிக்க அடிமையான ஆமிர் பின் ஃபுகைரா அவர்களிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதாவது அவர் தமது ஆடுகளை தவ்ர் குகைக்கு அருகில் மேய்த்துக் கொண்டிருக்க வேண்டும். இரவு நேரத்தில் அவர் அந்த ஆட்டின் பாலை புதிதாக கறந்து கொண்டு வர வேண்டும். மக்காவை விட்டு புறப்படும் நேரத்தை தீர்மானித்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரைவாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து தமது வீட்டிற்கு திரும்பி வந்து விட்டார்கள்.

(தாரீக் அல்கமீஸ் தொகுதி 2 பக்கம் 7 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அங்கு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஹிஜ்ரத்தின் நிகழ்ச்சிகளை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு கூறியவாறு அவர்களிடம் உயிரை அர்ப்பணிக்கக் கூடிய ஒரு பணியை ஒப்படைத்தார்கள். அதாவது இன்று இரவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய படுக்கையில் அதே பச்சை நிற அல்லது மற்றோர் அறிவிப்பிற்கேற்ப சிவப்பு நிற ஹஸ்ரமி போர்வையை போர்த்திக் கொண்டு அவர் தூங்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொதுவாக அந்தப் போர்வையுடன் தான் உறங்கி வந்தார்கள். மேலும் தமது அர்ப்பணிப்புமிக்க அந்த தொண்டருக்கு இறைவனின் உதவி ஒத்தாசைகளைப் பற்றியும் நம்பிக்கையூட்டினார்கள். மேலும் கவலைப்பட வேண்டாம். மிக நிம்மதியுடன் எனது படுக்கையில் உறங்கிக் கொண்டிருக்கவும். எதிரியால் உங்களை எதுவும் செய்ய முடியாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் மக்கா வாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சாதிக் மற்றும் அமீன் என்ற பட்டத்தை வழங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அமானிதங்களைப் பற்றிய கவலையும், பொறுப்புக்கான உணர்வும் ஏற்பட்டது. எனவே மக்களின் அந்த அமானிதங்களை திருப்பி ஒப்படைப்பதற்காக தனக்குப் பிறகு அவர் வர வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அதாவது அமானிதங்களை திருப்பி ஒப்படைத்து விட்டு பின்னர் மதீனாவிற்கு வந்து விடுங்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் 3 நாட்கள் வரை மக்காவில் தங்கியிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக மக்களிடம் அவர்களின் அமானிதங்களை அன்னார் (ரலி) அவர்கள் ஒப்படைத்து விட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அந்தப் பணியை முடித்து விட்டபோது அன்னாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கூடாரத்திற்கு சென்று சந்தித்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள்.

மக்கத்து நிராகரிப்பாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் இருந்தனர். ஒரு வகையில் அவர்களின் கண்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவர்கள் கைகளில் வாள்களை ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டைச் சுற்றிலும் காவல் காத்துக் கொண்டிருந்தனர். எப்போது இரவு ஆகும். நாம் வாளால் தாக்குதல் நடத்தி ஒரே தாக்குதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கதையை முடித்து விடலாம் என்ற ஏக்கத்தில் நின்று கொண்டிருந்தனர். மேலும் அவர்களின் தலைவனாக இருந்த அபூஜஹில் மிகவும் தற்பெருமையுடனும், எள்ளி நகையாடியவாறு, எனது விவகாரத்தில் நீங்கள் என்னைப் பின்பற்றினால் நீங்கள் அரபைச் சார்ந்த மற்றும் சாராத பகுதிகளுக்கு அரசராகி விடுவீர்கள். பின்னர் நீங்கள் உங்களது மரணத்திற்குப் பிறகு எழுப்பப்படுவீர்கள். அப்போது உங்களுக்காக உர்தன் நாட்டு தோட்டங்களுக்கு ஒப்பான தோட்டங்கள் உருவாக்கப்படும். ஒருவேளை நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால் உங்களுக்கு மத்தியில் கொலை கொள்ளை சூழ்ந்து விடும் என்று முஹம்மது (ஸல்) கூறுகின்றார் என்று அவன் கூறிக் கொண்டிருந்தான். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்து, ஆம்! நான் அவ்வாறே கூறுகின்றேன் என்று கூறியவாறு சூரா யாஸீனின் இந்த வசனங்களை ஓதினார்கள்.

يٰسٓ ۚ﴿۲﴾ وَالْقُرْاٰنِ الْحَكِيْمِ ۙ﴿۳﴾ اِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ۙ﴿۴﴾
عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ؕ﴿۵﴾ تَنْزِيْلَ الْعَزِيْزِ الرَّحِيْمِ ۙ﴿۶﴾
لِتُنْذِرَ قَوْمًا مَّآ اُنْذِرَ اٰبَآؤُهُمْ فَهُمْ غٰفِلُوْنَ ﴿۷﴾
لَقَدْ حَقَّ الْقَوْلُ عَلٰٓى اَكْثَرِهِمْ فَهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿۸﴾
اِنَّا جَعَلْنَا فِيْٓ اَعْنَاقِهِمْ اَغْلٰلًا فَهِيَ اِلَى الْاَذْقَانِ
فَهُمْ مُّقْمَحُوْنَ ﴿۹﴾ وَجَعَلْنَا مِنْۢ بَيْنِ اَيْدِيْهِمْ
سَدًّا وَّمِنْ خَلْفِهِمْ سَدًّا فَاَغْشَيْنٰهُمْ فَهُمْ لَا يُبْصِرُوْنَ ﴿۱۰﴾

தலைவரே! நாம் ஞானம் நிறைந்த திருக்குர்ஆனை நீர் தலைவர் என்பதற்கு சான்றாக வழங்குகிறோம். நிச்சயமாக நீர் தூதர்களைச் சேர்ந்த ஒருவர் ஆவீர். நீர் நேரான வழியில் இருக்கின்றீர். இது வல்லோனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய இறைவனால் இறக்கப்பட்டதாகும். எச்சரிக்கை செய்யப்படாத மூதாதையரைக் கொண்ட மக்களுக்கு நீர் எச்சரிக்கை செய்வதற்காக இது அருளப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் கவனமற்றவர்கள் ஆவார்கள். நிச்சயமாக நம் வாக்கு அவர்களுள் பெரும்பாலார் குறித்து உண்மை ஆயிற்று. ஏனெனில் அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை. நாம் அவர்களின் கழுத்துகளில் விலங்குகளை மாட்டியுள்ளோம். அவை அவர்களின் தாடை வரை உள்ளன. அதனால் அவர்களுடைய தலைவர்கள் பின்னால் தள்ளப்படுகின்றனர். நாம்

அவர்களுக்கு முன்னால் ஒரு தடையை ஏற்படுத்தி உள்ளோம். அவர்களுக்குப் பின்னாலும் ஒரு தடையை ஏற்படுத்தி உள்ளோம். நாம் அவர்களை மூடியுள்ளோம். எனவே அவர்களால் பார்க்க முடிவதில்லை. (36:2–10)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கண்களில் மண்ணை தூவி விட்டு அவர்களுக்கு முன்னாலேயே கிளம்பி சென்று விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு முன்னால் செல்வதை யாருக்கும் தெரியாமல் ஆகி விட்டது. இது இறை வல்லமை ஆகும். அவர்கள் சற்று குனிந்து உள்ளே பார்த்திருந்தபோது முஹம்மது (ஸல்) அவர்கள் உள்ளே தமது படுக்கையில் தான் உள்ளார்கள் என்று மன நிறைவு அடைந்து வந்தார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னு ஹிஷாம் பக்கம் 342, 348 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தின் குறிப்பை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு செய்துள்ளார்கள்: இரவின் இருள் சூழ்ந்த நேரமாக இருந்தது. அநீதியாளர்களான குரைஷிகள் பல்வேறு கோத்திரங்களை சார்ந்தவர்களாக இருந்தார்கள். தமது கொலைகார திட்டத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை சுற்றி ஒன்று கூடி முற்றுகையிட்டிருந்தனர். மேலும் அதிகாலை ஆகும்போது அல்லது அன்னார் (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்து வெளியே வந்தவுடன் அன்னார் (ஸல்) மீது திடீரென தாக்குதல் நடத்தி கொன்று விட வேண்டும் என்று காத்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில நிராகரிப்பாளர்களின் அமானிதங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் பெரும்பாலான மக்கள் தமது அமானிதங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் நம்பகத்தன்மையின் காரணமாக அன்னார் (ஸல்) அவர்களிடமே ஒப்படைத்து வந்தார்கள். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அந்த அமானிதங்களின் கணக்கு வழக்குகளை புரிய வைத்து விட்டார்கள். மேலும் அமானிதங்களை திருப்பி ஒப்படைக்காமல் மக்காவை விட்டு வெளியேறக் கூடாது என்று வலியுறுத்தி இருந்தார்கள். அதன் பிறகு நீங்கள் எனது படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள். மேலும் இறை அருளால் எந்தத் தீங்கும் அன்னாருக்கு ஏற்படாது என்று ஆறுதலும் வழங்கினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் படுத்துக் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சிவப்பு நிறப் போர்வையை அன்னார் மீது போர்த்தி விட்டார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறி தமது வீட்டை விட்டு வெளியேறினார்கள். அந்த நேரத்தில் முற்றுகையாளர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் வாசலுக்கு முன்னால் இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவின் முதல் பகுதியிலேயே வீட்டை விட்டு கிளம்பி வருவார்கள் என்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. எதிரிகள் அந்த நேரத்தில் எந்த அளவிற்கு கவனமற்று இருந்தார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கண்களில் மண்ணை தூவி விட்டு அவர்களுக்கு முன்னாலேயே சென்று விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு அது பற்றி எதுவும் தெரியவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டிருந்த குரைஷிகள் சிறிது சிறிது நேரத்திற்குப் பிறகு அன்னார் (ஸல்) அவர்களின் வீட்டினுள் எட்டிப் பார்த்து வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இடத்தில் இருப்பதைப் பார்த்து மன நிறைவு அடைந்து வந்தார்கள். ஆனால் பொழுது விடிந்ததும் அவர்களின் இரை அவர்களின் கைகளை விட்டு நழுவி விட்டது என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. அப்போது அவர்கள் இங்கும் அங்கும் ஓடினார்கள். மக்காவின் வீதிகளில், சஹாபிகளின் வீடுகளில் தேடினார்கள். ஆனால் எதுவும் தெரியவில்லை. இந்தக் கோபத்தில் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை பிடித்தார்கள். மேலும் அவர்களை சிறிது அடித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 236, 237)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி தமது சொந்த பழைய நகரத்தை விட்டு வெளியேறியபோது எதிரிகள் அன்னாரை கொலை செய்யும் எண்ணத்துடன் நாலா புறமும் அந்த அருளுக்குரிய வீட்டை சுற்றி வளைத்திருந்தார்கள். அப்போது உயிரை அர்ப்பணிக்கும் அன்பரான ஒருவர் இருந்தார். அவரிடத்தில் அன்பும், ஈமானும் நிறைந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படுக்கையில் எதிரிகளின் ஒற்றர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டு சென்றதைக் குறித்து எந்த விசாரணையும் செய்து விடக் கூடாது. மேலும் தன்னையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என எதிரிகள் கருதி கொலை செய்வதற்காக அங்கேயே காத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் முகத்தை மறைத்துக் கொண்டு அன்னார் (ஸல்) படுக்கையில் படுத்திருந்தார்கள்.

کس بہرِ کسے سر نَدِ ہَد جان نَفشَا نَد
عِشق است کہ اِیں کار بَصَدُ صِدق کُنَا نَد

(சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானீ கஸாயின் தெபகுதி 2 பக்கம் 64, 65 அடிக்குறிப்பு)

எந்தவொரு நபரும் பிறருக்காக தனது தலையை கொடுப்பதில்லை. உயிரையும் விடுவதில்லை. ஆனால் உண்மையான அன்பு தான் உண்மையுடன் இந்தப் பணியை மனிதனை செய்ய வைக்கின்றது. எவ்வாறிருப்பினும் அந்த நேரம் குறித்து அறிவிப்புகள் உள்ளன. அதில் கருத்து வேறுபாடு உள்ளது. இரவின் முதல் பகுதி என்று சிலரும், நடு இரவு என்று சிலரும், இரவின் இறுதி நேரம் என்று சிலரும் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நேரத்தில் வீட்டை விட்டு புறப்பட்டார்கள் என்பதில் அறிவிப்புகளில் கருத்து வேறுபாடு உள்ளது. அதையும் நான் குறிப்பிடுகின்றேன்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவின் இறுதிப் பகுதியில் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். எனவே முஹம்மது ஹுஸைன் ஹேகல் இவ்வாறு எழுதுகின்றார்: இரவின் இறுதிப் பகுதியில் இணை வைப்பவர்களின் கவனக்குறைவின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டை நோக்கி புறப்பட்டார்கள். மேலும் அங்கிருந்து இருவரும் வீட்டின் பின்புற வாசல் வழியாக வெளியேறி தெற்கில் தவ்ர் குகையின் பக்கம் சென்று விட்டார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஹயாத்தே முஹம்மது என்ற நூல் பக்கம் 223, 224)

அடுத்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடு இரவு நேரத்தில் புறப்பட்டார்கள். தலாயில் அந்நுபுவ்வா என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் நடு இரவில் தவ்ர் குகையை நோக்கி புறப்பட்டார்கள்.

(தலாயிலுன் நுபுவ்வா தொகுதி 2 பக்கம் 465, 466 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

مَدَارِجُ النُّبُوَّة எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலை நேரத்தில் ஹிஜ்ரத் செய்து செல்ல வேண்டும் என்று எண்ணம் கொண்டபோது மாலையிலேயே ஹஸ்ரத் அலி முர்தஸா كَرَّمَ اللّٰهُ وَجْهَهٗ அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இன்று இரவு நீங்கள் இங்கேயே உறங்குங்கள். ஏனென்றால் இணை வைப்பவர்கள் ஐயங்களுக்கு உள்ளாகி உண்மையான நிலவரத்தை அறியாதவர்களாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

(ஷேக் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹலவி அவர்கள் எழுதிய மதாரிஜுன் நுபுவ்வா என்ற நூல் தொகுதி 2 பக்கம் 83 – லஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவின் முதல் பகுதியிலேயே தமது வீட்டை விட்டு புறப்பட்டு சென்று விட்டார்கள். எனவே அதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: முற்றுகையாளர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் வீட்டு வாசலுக்கு முன்னால் இருந்தார்கள். ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அளவிற்கு விரைவாக இரவின் முதல் பகுதியிலேயே வீட்டை விட்டு புறப்பட்டு விடுவார்கள் என்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளின் கண்களில் மண்ணை தூவி விட்டு புறப்பட்டு சென்று விடும் அளவில் அவர்கள் அந்த நேரத்தில் கவனக்குறைவாக இருந்தனர். அவர்கள் அது பற்றி அறியாதவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மௌனமாக ஆனால் விரைவாக மக்காவின் தெருக்களை கடந்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திலேயே ஊருக்கு வெளியே சென்று விட்டார்கள். மேலும் தவ்ர் குகைப் பாதையை நோக்கி சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் ஏற்கனவே அனைத்து விஷயமும்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 03 February 2022 Issue No. 5

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

பேசப்பட்டிருந்தது. எனவே அன்னாரும் வழியில் இணைந்து கொண்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 237)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்டு கூறிய விஷயம் இதுவாகும்: மக்கத்து மக்கள் அன்னார் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு முன்னால் அன்னார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக ஒன்றுகூடி இருந்தனர். அன்னார் (ஸல்) அவர்கள் இரவின் இருளில் ஹிஜ்ரத் செய்யும் எண்ணத்துடன் தனது வீட்டை விட்டு வெளியே புறப்பட்டார்கள். தங்களின் எண்ணத்தைப் பற்றிய செய்தி நிச்சயம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் கிடைத்திருக்கும் என்று மக்கா வாசிகள் நிச்சயம் ஐயம் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடந்து சென்றபோதும் இது வேறு யாரோ ஒருவர் என்றே அவர்கள் கருதினர். அன்னார் (ஸல்) மீது தாக்குதல் நடத்துவதற்கு பகரமாக அன்னாரைக் கண்டு ஒளிந்து கொண்டார்கள். தங்களின் எண்ணங்களைக் குறித்து முஹம்மது (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்து விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தனர். அந்த இரவிற்கு முன்னாலேயே பகல் பொழுதிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத் செய்வதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் தகவல் வழங்கப்பட்டிருந்து. எனவே அன்னாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். இருவரும் இணைந்து சிறிது நேரத்தில் மக்காவிலிருந்து புறப்பட்டு விட்டார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 222, 223)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கருத்துப்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலை நேரத்தில் வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்றார்கள். எனவே அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல்லும் நேரத்தில் எந்த எதிரியும் அன்னாரை பார்க்கவில்லை. உண்மையில் அது காலை நேரமாக இருந்தது. அனைத்து எதிரிகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டிருந்தார்கள். எனவே சூரா யாஸீனில் இது பற்றி அல்லாஹ் குறிப்பிட்டுள்ளதுபோன்று இறைவன் அந்த அனைத்து தீயவர்களின் கண்களிலும் திரையிட்டு விட்டான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எதிரிகளின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு சென்று விட்டார்கள். (சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானி கஸாயின் தொகுதி 2 பக்கம் 66 அடிக்குறிப்பு)

எவ்வாறிருப்பினும் இவை பல்வேறு அறிவிப்புகளாகும். ஆயினும் நிராகரிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை என்பதே அதன் முடிவாகும்.

தனது வீட்டை விட்டு வெளியேறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தப் பக்கம் சென்றார்கள் என்பது தொடர்பாகவும் பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. ஓர் அறிவிப்பில் இவ்வாறு கருத்து கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டை விட்டு வெளியேறி இருப்பார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வீட்டை விட்டு வெளியேறி இருப்பார்கள். மேலும் வழியில் ஏதோவொரு இடத்தில் இருவரும் ஒன்றுகூடி தவ்ர் குகையை நோக்கி புறப்பட்டிருப்பார்கள். (தாரீக் தப்ரி தொகுதி 1 பக்கம் 568 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்து தவ்ர் குகையை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். சிறிது நேரம் கழித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை அடைந்தார்கள். அப்போது அன்னாரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்று விட்டார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் தவ்ர் குகையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றார்கள். எனவே தாங்களும் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் சென்று விட்டார்கள். (அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 2 பக்கம் 47 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இந்த அறிவிப்பு மிகவும் பலவீனமானதாகவே தெரிகிறது. இதிலிருந்து நமக்கு இந்த தாக்கம் கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்காக காத்திருந்தார்கள். மேலும் அன்னார் படுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கே சென்றார்கள்? என்பது கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தெரியவில்லை. மேலும் இவை அனைத்தையும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவர்களுக்கு கூறுகின்றார்கள்.

ஹிஜ்ரத் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த இரகசியமான பயணமாக அது இருக்கும்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்ற புரியும் தன்மை கொண்ட பொறுப்புமிக்க நபருக்கு அது குறித்து தகவல் தெரியாமல் இருப்பது சாத்தியமற்றதாகும். எனவே இந்த அறிவிப்பை காட்டிலும் பெரும்பாலான இடங்களில் இடம் பெற்றுள்ள ஏனைய அறிவிப்புகள் மிகவும் சரியானதாகவும், பொருத்தமானதாகவும் தெரிய வருகின்றது. ஏனென்றால் அதற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டை விட்டு புறப்பட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். மேலும் அங்கிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் தவ்ர் குகைக்கு புறப்பட்டு விட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம் பக்கம் 343 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நன்றியுணர்வுமிக்க இரண்டு நபர்களான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) ஆகியோர் மிக விரைவாக பயணத்திற்கான உணவை தயார் செய்து விட்டார்கள். அதில் பொறித்த ஆட்டின் இறைச்சியும் இருந்தது. சூழலின் அவசரம் மற்றும் முக்கியத்துவத்தை கருதி தோலால் ஆன உணவு பாத்திரமே இருந்தது. அதை கட்டுவதற்கு எதுவும் இருக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் தனது நதாக் அதாவது இடுப்புத் துணியை இரண்டு துண்டுகளாக்கி பின்னர் உணவை கட்டினார்கள். ஒன்றைக் கொண்டு உணவுப் பொட்டலத்தையும், மற்றொன்றைக் கொண்டு தண்ணீர் பாத்திரத்தின் வாய்ப் பகுதியையும் கட்டி விட்டார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 107 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்பு மற்றும் நன்றியுணர்வின் அந்த தருணங்களை மிகவும் ஆழமாக பார்த்துக் கொண்டிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அஸ்மாவே! உங்களுடைய இந்த நதாக் எனும் இடுப்புத் துணிக்கு பகரமாக உங்களுக்கு சொர்க்கத்தில் அல்லாஹ் இரண்டு இடுப்புத் துணிகளை வழங்குவான். அதாவது நதாக் என்பது இடுப்பில் கட்டி இருக்கின்ற துணியாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலின் காரணமாக பிற்காலத்தில் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் ذات النطاقين (இரண்டு இடுப்புத் துணியை கொண்டவர்) என்று அழைக்கப்பட்டார்கள்.


(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 239 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

(தொடரும்...)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad